பக்கங்கள் 16
விலை ரூ. 50
Registered as a Newspaper
# உதயன்
புதன் பொய்கை
சுடர் : 38
கதிர் : 130
புதன்கிழமை 05 ஏப்ரல் 2023
பங்குனி 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# வடக்கு – கிழக்குப் பகுதிகளில் பௌத்த மரபுரிமை அழிப்பாம்

## சரத் வீரசேகர கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்ரல் 5

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு இந்துக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பௌத்த மரபுரிமைகளை அழிப்பதற்கும் ஓர் எல்லை உண்டு. எனினும் நாம் பொறுமையுடன் செயற்படுகிறோம். எதிர்காலத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார். »15

## சிவ தோஷம்: குல நாசம்

நாடாளுமன்றில் நேற்று சிறீதரன் எம்.பி. ஆவேசம்

கொழும்பு, ஏப். 5

இனவாதத்தின் உச்சம் தமிழர்களின் மத உரிமைகளையும் விட்டு வைக்கவில்லை. 'சிவ »15

மண்வெட்டிப் பிடியால்

## மாமனார் தாக்கி மருமகன் பலி!

கிளிநொச்சியில் கொடூரம்



கிளிநொச்சி, ஏப். 5

கிளிநொச்சி, கிருஷ்ணபுரம் பகுதியில், மாமனாரின் தாக்குத »15

நாவலர் கலாசார மண்டபம்

## ஆளுநரின் முயற்சிக்கு நீதிமன்று தடைவிதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். மாநகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்த யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்ட »15

ஊர்காவற்றுறை – தம்பாட்டிப் பகுதியில்

## கடற்படைக்கான காணி சுவீகரிப்பு மக்கள் போராட்டத்தால் நிறுத்தம்!



விரிவு:- பக் - 15 இல்






# குழப்பங்களை உருவாக்குகிறது தொல்பொருள் திணைக்களம்

## நாடாளுமன்றில் சாணக்கியன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.5

**தொல்பொருள் திணைக்களம் மக்களிடையே இனவாதத்தை ஏற்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றது. இனவாதச் செயற்பாடுகள் தொடருமாக இருந்தால், ஐ.எம்.எப். மட்டும் இல்லை எவராலும் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றம்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி நேரத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமைச்சரே (விதுர விக்கிரமநாயக்க) நீங்கள் ஓர் இனவாதி. நீங்கள் கடந்த காலத்திலே மட்டக்களப்புக்கு வந்தபோது குசலான மலையில் வைத்து உங்களைத் தடுத்து அனுப்பியமை காரணமாகவே இன்றும் குசலான மலையில் சைவ சமய வழிபாடுகளைச் செய்ய முடிகின்றது. தொல்பொருள் திணைக்களத்தினை வைத்துக்கொண்டு நீங்கள் இந்த நாட்டுக்குள்ளே மீண்டும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றீர்கள்.

வெடுக்குநாறி மலையிலே ஒரு குழப்பம், குருந்தூர் மலையிலே ஒரு குழப்பம், குசலான மலையிலே ஒரு குழப்பம், அரிசி மலையிலே ஒரு குழப்பம், தற்போது திருகோணமலை புல்மோட்டையிலே ஒரு குழப்பம்.

நாட்டில் ஐ.எம்.எப். ஒப்பந்தம் வந்தாலும் சரி உங்களைப் போன்ற இனவாதிகள், உங்களைப் போன்ற இனவாத அமைச்சர்கள், இந்தத் தொல்பொருள் திணைக்களத்தை வைத்துக்கொண்டு, வடக்கு - கிழக்கில் எங்களுடைய காணிகளை சுவீகரிக்கின்றீர்கள். தொல்பொருள் செயலணி என்பது தொல்பொருளைப் பாதுகாக்கவேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், தொல்பொருள் என்ற போர்வையில் ஏன் பௌத்த பிக்குகள் வர வேண்டும்? ஏன் அதிகாரிகள் இல்லையா?

சோற்றுக்கும் தண்ணீருக்கும் வழியில்லாமல் இருக்கும்போதும் கூட தொல்பொருள் திணைக்களத்துக்குப் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இப்படியான இனவாதச் செயற்பாடுகள் தொடருமாக இருந்தால், ஐ.எம்.எப். மட்டும் இல்லை எவராலும் இந்த நாட்டைக் காப்பாற்றமுடியாது. தொல்பொருள் செயலணியும், தொல்பொருள் திணைக்களமும், நீங்களும், இந்த அரசும் இனவாதத்துக்காகவே இதைப் பயன்படுத்துகின்றீர்கள்.

இவற்றை உடனடியாக நிறுத்தாவிட்டால் வடக்கு, கிழக்கை நாங்கள் முடக்குவோம். உங்களைப் போன்ற இனவாதிகள் வடக்கு, கிழக்குக்கு வர முடியாதவாறு முடக்குவோம் - என்றார். (எ-22)

# பல்கலை மாணவர்கள் கொழும்பில் போராட்டம்

கொழும்பு, ஏப். 5

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

போராட்டம் தொடர்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே குறிப்பிடுகையில், பல்கலைக்கழகங்களுக்குள் தற்போது அடக்குமுறைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல்கலை மாணவர்கள் சிலர் போலியான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எந்தவித காரணமும் இன்றி களனி பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சிலருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் எந்தவித அடிப்படைக் காரணமும் இன்றி கால வரையறையின்றி மூடப்பட்டிருந்ததோடு, சுமார் 30 பேரின் மாணவர் உறுப்புரிமையும் நீக்கப்பட்டுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் இது போன்ற பல்வேறு செயற்பாடுகளும் பேராதனை மற்றும் ருஹுணு பல்கலைக்கழகங்களிலும் இவ்வாறான அடக்குமுறைகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்துக்கும் தீர்வு கோரியே இன்று (நேற்றுமுன்தினம்) ஆர்ப்பாட்டதை முன்னெடுத்திருந்தோம் - என்றார். (எ-14,இ)

# ரஷ்யாவின் கப்பல்களை கைப்பற்றாது இலங்கை!

## *உறுதி வழங்கப்பட்டுள்ளது என்கின்றார் பந்துல*



கொழும்பு, ஏப். 5

மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக ரஷ்யக் கப்பல்கள் கைப்பற்றப்படாது என்பதுடன், பணியாளர்களும் கைது செய்யப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை இலங்கை அரசாங்கம் ரஷ்ய அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

எதிர்காலத்தில் ரஷ்யாவிடமிருந்து தள்ளுபடியுடன் மசகு எண்ணெயை கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை ரஷ்யாவிடம் இருந்து இலங்கை தற்போது கொள்வனவு செய்யாவிட்டாலும், இலங்கை நம்பிக்கையை கைவிடவில்லை. மசகு எண்ணெய் கொள்வனவு குறித்து, இலங்கை அதிகாரிகளுக்கும் ரஷ்ய அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுகள் இன்னும் முடிவடையவில்லை. பேச்சு வெற்றிகரமாக முடிந்தால், இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் இணக்கப்பாடு எட்டப்படும்.

மேலும் இரசாயன உரங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை இலங்கை நீக்கியுள்ளதையடுத்து ரஷ்யாவிடம் இருந்து உரம் கொள்வனவு செய்வது குறித்து இலங்கை பரிசீலித்து வருகின்றது. அதுமட்டுமின்றி, ரஷ்யாவிடம் இருந்து ரயில் இயந்திரங்கள், சரக்கு ரயில் பெட்டிகள் மற்றும் உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்யவும் இலங்கை அரசாங்கம் உத்தேசித்துள்ளது - என்றார். (எ-14,இ)

# எங்களைப் புனிதர்களாக்கிய ரணில், மைத்திரிக்கு நன்றி!

## இப்படிச் சொல்கிறார் நாமல் ராஜபக்ச

கொழும்பு, ஏப். 5

நல்லாட்சி காலத்தில் எம்மீது விசாரணை நடத்தி, வழக்குத் தொடுத்து எம்மை குற்றமற்றவர்கள் என்று இப்போது சொல்லும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு நன்றிகள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

களவு, கொள்ளையென்றெல்லாம் ராஜபக்சக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ராஜபக்சக்களுக்கு வெளிநாடுகளில் சொத்துக்கள், கணக்குகள் உள்ளன என்றும் கூறப்பட்டது. ஆனால் அவை போலியானவை என்பது உறுதியாகியுள்ளது.

நல்லாட்சியின்போது விசாரணை நடத்தப்பட்டது. வெளிநாட்டில் கணக்கு இருப்பு இருப்பது கண்டறியப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அதேபோல ராஜபக்சக்களுக்கு எதிராக வழக்கும் தொடுக்கப்பட்டது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. அவர்கள் விடுதலையாகினர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறினார். நல்லாட்சியின் போது இவர்களே ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகித்தனர். எனவே, நாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி.

ஊழல் எதிர்ப்பு சட்டவரைவு அவசியம். அது நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டால் முழு ஆதரவு வழங்கப்படும். அத்துடன், போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற சரத்தும் அந்த சட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டும்.

பொதுஜன பெரமுன வசமே பலமான அரசியல் கட்டமைப்பு பொறிமுறை உள்ளது. அதனால்தான் கட்சி மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது-என்றார். (ஒ-44)

# வெளிநாட்டுப் பணியாளர்களின் தீர்வை வரிச்சலுகை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 5

வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு விமான நிலையங்களில் வழங்கப்படும் தீர்வை வரிச்சலுகையை மேலும் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தொழில், வெளி நாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானத்தை எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஐந்து கட்டங்களின் கீழ் இந்த வரிச்சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. 2 ஆயிரத்து 400 முதல் 4 ஆயிரத்து 799 டொலர் வரை நிதியை அனுப்பும் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு 600 டொலர் மேலதிக தீர்வை வரிச்சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. 4 ஆயிரத்து 800 முதல் 7 ஆயிரத்து 199 டொலர் வரை நிதியை அனுப்புவோருக்கு 960 டொலர் மேலதிக தீர்வை வரி சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது. (எ-14,இ)

# சுற்றுச்சூழலை பாதிக்கும் சலவைத்தூள் பைக்கற்

கொழும்பு, ஏப். 5

நீர் நிலங்களில் சலவைத்தூள் பைகளை அதிகளவில் வீசுவதால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜயசிங்க தெரிவித்துள்ளதாவது:

20 கிராம் சலவைத் தூள் மற்றும் திரவப் பைகளை பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் 250 கிராம், மற்றும் 500 கிராம் பைகள் சுற்றுச்சூழலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தக்கூடிய இந்த வகை பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது- என்றார். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜனநாயகம் உருவாக சர்வதேசத்தின் அழுத்தம் அவசியம்!

## பேர்ள் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஏப். 5

**இனப்பிரச்சினையற்ற, மதச்சார்பற்ற நிலையான ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தம் தொடர வேண்டியது அவசியம் என்று சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பு (பேர்ள்) வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு தெரிவித்துள்ளதாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான கடுமையான மனித உரிமைகள் சார் தேவைப்பாடுகள் இலங்கையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஆயினும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒழிக்கப்படும் என்றும், அதற்குப் பதிலாக சர்வதேச நியமங்களுக்கு அமைவான பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்கப்பட்டது.

இருந்தபோதும், பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் கடந்த 6 வருடங்களாக இலங்கைக்கு வழங்கப்பட்ட சட்ட ஆலோசனைகள் மற்றும் ஆதரவு என்பன முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. மாறாக சர்வதேச நியமங்களைப் பூர்த்தி செய்யாத பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை இலங்கை அறிமுகப்படுத்தியுள்ளது.


அதனால் நாட்டில் இனப்பிரச்சினையற்ற, மதச்சார்பற்ற ஸ்திரமான ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதற்கு இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தம் தொடர வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (எ-14)




மூந்தநாள் வடமராட்சியில மீனவர்கள் சுருக்கு வலையைத் தடை செய்யச் சொல்லி போராட்டம் நடத்தினவை. மத்தளத்துக்கு ரண்டு பக்கம் தான் இடி. ஆனால், எங்கட மீனவர்களுக்கோ எல்லாப் பக்கமும் இடி. ஒருபக்கம் இந்திய மீனவர்கள், இன்னொருபக்கம் சிங்கள மீனவர்கள், மற்றப்பக்கம் நேவிக்காரர், அதைவிட கடலட்டைப் பண்ணை, எண்ணெய்ப்பிரச்சினை, மழை, புயல் எண்டு எந்தப்பக்கம் திரும்பினாலும் பிரச்சினை தான். இப்பிடிப்பட்ட பிரச்சினைக்குள்ள இப்ப சுருக்குவலைப் பிரச்சினையும் பெரிசாகிட்டுது. இந்தச் சுருக்குவலையைப் பாவிக்கிற சிலருக்கு அரசியல் செல்வாக்கு இருக்கு. அதால அவையை நீரியல் திணைக்களமோ, நேவியோ ஒண்டும் செய்யாயினம். ஆனால், அப்பாவி மீனவரை மட்டும் நடுக்கடலில வைச்சு 'கஞ்சா கடத்துறியா? டைனமட் பாவிக்கிறியா?' எண்டு கேட்டு ஆய்க்கினை செய்வினம்.

இந்த மீனவர்களின்ர பிரச்சினைக்குத் தீர்வைக் காணுறதுக்கு மீனவர் சங்கங்கள்தான் முன்னுக்கு நிண்டு போராடவேணும். ஆனால், ஒண்டிரண்டு மீனவர் சங்கத்தில இருக்கிற 'பெரிய கையள்' கூட தங்கட அரசியல் செல்வாக்கைப் பாவிச்சு, தங்களுக்கு அணைவான ஆக்களுக்கு உந்தச் சுருக்குவலை தொழில் செய்ய பெர்மிசன் குடுக்கினம் எண்டு கேள்வி. கிட்டடியில ஒரு ஓடியோ வந்தது. அதில வடமராட்சி கிழக்குப் பக்கமாயுள்ள ஒரு மீனவர் சங்கத்தின்ர நிர்வாகத்தில இருக்கிறவர் சட்டவிரோத மீன்பிடித் தொழிலுக்கு பெர்மிசன் குடுக்கிறதுக்கு லட்சக்கணக்கில லஞ்சம் கேட்டிருக்கிறார். அதில ஒருபங்கு தன்ர கட்சித் தலைவருக்கும் போகுமெண்டு வேற வாக்குமூலம் மாதிரி கக்கியிருக்கிறார். அந்த ஓடியோ எல்லா சோஷல் மீடியாவிலையும் ரிலீஸ் ஆகி, அந்த மீனவர் சங்கப் பிரதிநிதி கதைச்ச விசயமெல்லாம் அவர் சம்பந்தப்பட்ட கட்சியின்ர மேலிடத்துக்கு போட்டுது. கட்சித்தலைவர் ஆளுக்கு கடும் டோஸ் குடுக்க, அடுத்தநாளே அந்தச் சங்கப் பிரதிநிதி ' அந்த ஓடியோல இருக்கிறது நானும் என்ர ப்ரெண்டும் சும்மா பகிடிக்கு கதைச்சது.. அதை ஆரோ வம்புக்கு எடுத்து திரிச்சுப் போட்டினம்' எண்டு முழுப்பூசணிக்காயை சோத்துக்க மறைக்க வெளிக்கிட்டு இருக்கிறார். ஆனால், எல்லாருக்கும் விசயம் தெரிஞ்சதால ஒருத்தரும் அவர் சொன்னதை நம்பேலை.

அப்பிடியான சிலர் தான் தென்னிலங்கைப் பக்கமிருந்து வாற சிங்கள ஆக்களுக்கும் இஞ்ச கடலட்டை பிடிக்க அனுமதி குடுக்கினம், சுருக்குவலைக்கும் அனுமதி குடுக்கினம். அதால மீனவர்கள் முதலில இப்பிடி தங்களுக்குத் துரோகம் செய்யிற பிரதிநிதியளைக் கண்டுபிடிச்சு அவையைப் பதவியில இருந்து அப்புறப்படுத்தினாலே அரைவாசிப் பிரச்சினை தீர்ந்திடும். மேலிடத்து அணைவில்லாட்டி சட்டவிரோதத் தொழிலை துணிஞ்சு செய்ய மாட்டினமெல்லோ. ஒருக்கா மீனவர்கள் இதைக் கவனத்தில எடுக்கிறது நல்லது.



- பட்சி

# தென்மாகாணத்தை சுட்டெரிக்கும் சூரியன்

கொழும்பு, ஏப். 5

தென்மாகாணத்தில் சில மாவட்டங்களில் சூரியன் உச்சம் கொடுக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்ட வானிலை அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரியனின் வெளிப்படையான வடக்கு நோக்கிய சார்பு இயக்கத்தில், அது நேரடியாக மேலே செல்கிறது. ஏப்ரல் 5ஆம் திகதி முதல் (இன்று) 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் காலி தல்பே, அளுத்கமவலிப்பிட்டிய, மாத்தறை திஹகொட ஆகிய பகுதிகளுக்கு மேல் சூரியன் உச்சம் கொடுக்கும்.

இதேவேளை ஊவா, மத்திய, தெற்கு மற்றும் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சப்ரகமுவ, மேல், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் மதியம் அல்லது இரவு நேரத்தில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும்.

எனவே வெப்பம், மழை போன்றவற்றால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் எடுக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

# லாப்ஸ் எரிவாயுவின் விலையும் குறைப்பு!

கொழும்பு, ஏப். 5

சமையல் எரிவாயுவின் விலையை லாப்ஸ் எரிவாயு நிறுவனமும் குறைக்கத் தீர்மானித்துள்ளது. இந்த விலை குறைப்பு இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ எடைகொண்ட எரிவாயு கொள்கலன் ஆயிரத்து 290 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. 5 கிலோ எரிவாயு கொள்கலன் 516 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, லிட்ரோ நிறுவனமும் உலக சந்தையில் எரிவாயுவின் விலை வீழ்ச்சி மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வு போன்ற காரணிகளால் எரிவாயுவின் விலை ஆயிரம் ரூபாவால் குறைக்கப்படும் என அறிவித்துள்ளது. (ச-இ)

# 13ஐ செயற்படுத்துவதில் ரணில் விடாப்பிடியாம்!

## இந்தியாவுக்கு "ஐஸ்" வைக்கிறது யானைக் கட்சி

கொழும்பு, ஏப். 5

அரசியல் ரீதியில் தனக்கு பின்னடைவு ஏற்படும் என்றபோதும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

'அதிகாரப்பகிர்வு விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இருப்பவர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதனால் சிறுபான்மையின மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாடுகளும் மாறிவருகின்றன. அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றார். இந்த விடயம் தனது அரசியல் செல்வாக்குக்கு சவாலாக அமையும் என்ற போதிலும் சரியான முடிவை எடுப்பதில் அவர் பின்வாங்காமல் உள்ளார். தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது அத்தியாவசிய காரணி என்று ஜனாதிபதி கருதுகின்றார்' என நவீன் திஸாநாயக்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள சூழலிலேயே இவ்வாறானதொரு தகவலை நவீன் திஸாநாயக்க வெளியிட்டுள்ளார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். ஒப்பந்த உள்ளடக்கம் சட்டங்களாக உருவாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஏப்.5**

**சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஒப்பந்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர், ஒப்பந்தத்தின் முக்கியமான விடயங்கள் சட்டங்களாகக் கொண்டுவரப்படும்.**

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நிதி அமைச்சில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் தொடர்பில் பல்கலைக்கழகங்களின் பொருளாதாரப் பிரிவு விரிவுரையாளர்களை தெளிவுபடுத்தும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்ட வரைவு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்ட வரைவு ஆகிய மூன்று வரைவுகளும் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சர்வதேச நாணய நிதிய வேலைத் திட்டம் தொடர்பில் அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கும் கருத்துக்களைப் பெறுவதற்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் பொருளாதாரப் பிரிவின் சிறந்த மாணவர்கள் பத்து பேரைத் தெரிவு செய்யுங்கள். தெரிவு செய்யப்படும் சில மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

18ஆவது தடவையாக மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை எதிர்பார்க்கவில்லை. நாட்டில் உற்பத்தி மற்றும் சேவைகள் தானியங்கி முறைமைக்குச் செல்ல வேண்டும். இல்லையெனில் இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் போட்டியிட முடியாது. அதற்காக கல்வி முறையை புதிதாக மாற்றியமைக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையின் முக்கியமான அம்சங்களை சட்டமாக கொண்டு வரவுள்ளோம். அதில் ஏதும் மாற்றம் செய்ய வேண்டுமானால் நாடாளுமன்றம் செல்லவேண்டும். அதிலுள்ள அடிப்படை விடயங்கள் மே மாதத்தில் சமர்ப்பிக்கப்படும். இரண்டாவதாக, பசுமைப் பொருளாதாரம் உட்பட நமது திட்டங்கள் என்ன? என்பது குறித்து தெளிவுபடுத்தப்படும். முதலில் இந்தத் திட்டங்கள் தொடர்பிலான கருத்துக்களைப் பெறவேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டமூலம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் ஆகிய மூன்று வரைவுகளும் எதிர்காலத்தில் கொண்டுவரப்பட வேண்டும். இந்த மூன்று சட்ட வரைவுகளையும் ஒன்றாகக் கொண்டு வரக்கூடாது என நீதி அமைச்சர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். அதனால் ஏப்ரல் இறுதிக்குள் ஒரு வரைவை முன்வைக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அதன் பிறகு, மற்ற இரண்டு வரைவுகள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எப்படியும் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் மூன்று வரைவுகளும் கொண்டு வரப்படும்.

தனியார் மயமாக்க வேண்டாம் என்று தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. அவ்வாறானால் என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறார்கள்? தொழிற்சங்கங்கள் விரும்பியபடி செயற்பட முடியாது. நாட்டில் மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை எதிர்க்கட்சிகள் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளன- என்றார். (எ-இ)

## கோத்தாவைக் கழற்றிவிட்டு ரணில் துதிபாடும் வீரசேகர!

கொழும்பு, ஏப்.5

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்கத் தேவை இல்லை. நாங்கள் கோத்தாபய ராஜபக்சவுக்குச் சரியான யோசனைகளையே கூறினோம். அவர் தான் அவற்றை உதறித் தள்ளி தன்னிச்சையாக முடிவெடுத்தார். அவர் எடுத்த முடிவுகள் எல்லாம் பிழையானவை. நாட்டின் வீழ்ச்சிக்குக் கோத்தாபயவே முழுக் காரணம்.

இவ்வாறு கடுமையாக விமர்சித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் நெருங்கிய சகாவான பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

ரணில் விக்கிரமசிங்க சிறந்த ஜனாதிபதி. அவர் மிகவும் இக்கட்டான நிலையில் நாட்டைப் பாரமேற்றார். சஜித் பிரேமதாஸ, சரத் பொன்சேகா எல்லோரும் நாட்டைப் பரமேற்பதற்குப் பயந்தார்கள். எப்படி நாட்டைக் கட்டியெழுப்புவது என்று அவர்கள் யோசித்தார்கள். ஆனால், ரணில் எதையும் யோசிக்கவில்லை. பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்று கோத்தாபய ராஜபக்ச கேட்டதும் எப்போது பதவியேற்கவேண்டும் என்றே ரணில் கேட்டார்.

ரணிலின் திறமையால் அனுபவத்தால் கோத்தாபய அவரைப் பிரதமராக நியமித்தார். பின்னர் கோத்தாபய விலகியதும் ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்று நாட்டின் நிலைமையை உடன் சரி செய்து விட்டார். இப்போது அவர் சிறந்த தலைவர். எமது ஆலோசனைகளைக் கோத்தாபய ஏற்றிருந்தால் இதே வேலையைக் கோத்தாபயவும் செய்திருப்பார். நல்ல பெயரைப் பெற்றிருப்பார் - என்றார். (எ-22)

## மக்களை பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் சட்டம்!

### ஐக்கிய மக்கள் சக்தி காட்டம்

கொழும்பு, ஏப்.5

உரிமைகளுக்காக அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் சகலரையும் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இயற்ற அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இதை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றத்தின் ஊடாக முறியடிப்போம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். முன்மொழியப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதம் என்ற பதத்துக்கு அரசாங்கம் நீண்ட விளக்கத்தை புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் கொடுத்துள்ளது. நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பை இந்தச் சட்டவரைவு ஏற்படுத்தும். ஜனநாயகத்துக்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளை கண்டித்து போராட்டத்தில் ஈடுபடும் சகலரையும் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தும். நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தாமல் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் தன்னிச்சையாக செயற்படுகிறது.

இந்தச் சட்டவரைவை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றத்தினூடாக முறியடிப்போம் - என்றார். (ச-இ)

## மனோவின் முயற்சிக்கு செல்வம் ஆதரவு

கொழும்பு, ஏப்.5

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் என்ற உங்களது முயற்சியைப் பாராட்டி வரவேற்கின்றோம். எதிர்வரும் காலங்களில் உங்களுக்கு உறுதுணையாக உங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்கு நாங்களும் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்து நிற்கின்றோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனுக்குத் தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அமைக்கும் யோசனை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே ரெலோவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (எ-22)

## மக்கள் குரல்களை நசுக்கவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.5

தற்போதைய அரசாங்கம் வரி மற்றும் அதிக மின் கட்டணத்தை அறவிட்டு சாதாரண மக்களுக்கு சுமையை ஏற்படுத்துகின்றது. துன்பத்துக்கு உள்ளாகும் மக்களின் குரல்களை அடக்குவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பயன்படுத்துகின்றது.


இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொரளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்களைத் தியாகம் செய்யக் கூறும் அரசாங்கம், பெரும் தொகையைச் செலவு செய்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேரம் பேசும் சதியை மேற்கொள்கின்றது.

பாடசாலைக் குழந்தைகளுக்கு மதிய உணவு இல்லை. கர்ப்பிணிகளுக்கு போஷாக்கான உணவுகள் இல்லை. மக்கள் அனைவரும் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கத்திடம் பணம் இல்லாதபோதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவதற்கு கோடி கோடியாகப் பணம் புழங்குகின்றது - என்றார். (எ-இ)



இலங்கைக்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல், வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையில் கடந்த மார்ச் 30 ஆம் திகதி கொழும்பிலுள்ள அமைச்சில் இடம்பெற்றது. பௌத்த மத இணைப்பு உட்பட ஆசியான் நாடுகளுடன் தொடர்பை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புனைவுகளை உண்மையாக்கல்

பல தசாப்த காலமாக தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்ட வகையில் சிங்களப் பேரினவாதிகளால் கையகப்படுத்தப்பட்டு பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றன. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், புத்தர் சிலை அமைத்தல் எனப் பல்வேறு வழிகளை இதற்காக சிங்களப் பேரினவாதிகள் கையிலெடுத்திருக்கின்றனர். இதற்காக முப்படைகள், திணைக்களங்கள் என்பன தமிழ் மக்களின் தாயகப் பகுதிகளில் களமிறக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பின்னர் இந்தத் திட்டமிட்ட கையகப்படுத்தல்கள் குறைந்திருந்தன. ஆனால், 2009 ஆம் ஆண்டு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், மீண்டும் இந்தத் திட்டமிட்ட செயற்பாடுகள் வீரியம் பெற்றிருக்கின்றன.

போர் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பல இராணுவத்தினரால் தொடர்ச்சியாக விழுங்கப்பட்டன. தமிழ் மக்களின் தொடர் போராட்டங்களால் அவற்றில் சில விடுவிக்கப்பட்டுள்ளபோதும், இன்னமும் பெரும் பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. இவற்றுக்கு மேலதிகமாக இப்போது தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டு இடங்களும், வரலாற்றுத் தொன்மையான இடங்களும் திட்டமிட்டு பௌத்த மயமாக்கப்படுகின்றன. அவற்றின் வரலாறுகள் திரிபுபடுத் தப்பட்டு அவற்றுக்குப் புதிதாக பௌத்த வரலாறு சகட்டுமேனிக்குப் புனையப்படுகின்றது. வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் துணையுடன் இந்த வரலாற்றுத் திரிபுகள் கனகச்சிதமாக சிங்களப் பேரினவாதிகளால் முன்னெடுக்கப்படுகின்றன.


அண்மைக்காலமாக தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டிடங்களை பௌத்த மயமாக்கும் செயற்பாடுகளை சிங்களப் பேரினவாதிகள் அசுர வேகத்தில் நிகழ்த்துகின்றனர். சிங்களப் பேரினவாதிகளால் நன்கு திட்டமிட்ட வகையில் நீண்ட கால நோக்குடன் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகள் தற்போது தடுக்கப்படாவிட்டால் இன்னும் ஒரு தசாப்த காலத்தில் 'இலங்கை பௌத்த நாடு' என்ற சிங்களப் பேரினவாதிகளின் கூக்குரல் உண்மையாகிவிடும் என்பது நிதர்சனம். ஆனால், அந்த ஆபத்தை தமிழ்த் தரப்புக்கள் உணர்ந்து செயற்படுவதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு சம்பவங்களும் நடைபெறும்போது ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதும், அறிக்கைகளை வெளியிடுவதும் பின்னர் ஓய்ந்துவிடுவதுமாகவே தமிழ்த் தரப்புக்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

தமிழ் அரசியல் தலைமைகள் வாக்கு அரசியலை – கட்சி அரசியலை – முன்னிறுத்தியே இந்த விடயங்களைக் கையாளுகின்றன என்ற விசனம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. சிங்களப் பேரினவாதிகளின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாத நிலைமையிலேயே தமிழ் அரசியல் தலைமைகள் இப்போது இருக்கின்றன. தமிழ் அரசியல் தலைமைகளிடம் இருக்கும் இந்த ஒற்றுமையின்மை சிங்களப் பேரினவாதிகளுக்கு பெரும் வாய்ப்பாக மாறியிருக்கின்றது. அறிக்கைகள் மூலமோ, சிறு குழுவின் கவனவீர்ப்புப் போராட்டங்கள் ஊடாகவோ அல்லது நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதன் மூலமோ இந்தக் கபளீகரச் செயற்பாடுகளை நிறுத்த முடியாது என்பது நிதர்சனம். சிங்களப் பேரினவாதிகளின் இந்தத் திட்டமிட்ட சிங்களமயமாக்கலைத் தடுப்பதற்குத் தமிழ்த் தரப்புக்களிடம் இருந்து பலமான எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்படுவது அவசியம். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல் தலைமைகளிடமே இருக்கின்றது. கட்சி பேதங்களைப் புறந்தள்ளி இந்த விடயத்தில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இந்தத் திட்டமிட்ட சிங்கள மயமாக்கலை இப்போது தடுத்து நிறுத்தத் தவறினால் எதிர்காலத்தில் எதுவுமே செய்யமுடியாது என்பதே நிதர்சனம். இதனை இனியாவது உணர்ந்து செயலாற்ற வேண்டும். இல்லாவிட்டால் ''இந்தத் தீவு சிங்கள பௌத்த நாடு'' என்ற பேரினவாதிகளின் கூச்சலை, மகாவம்சத் திரிபை நாமே உண்மையாக்கிவிடக்கூடும்.

### நாளொரு நல்வார்த்தை

" விழாமலே வாழ்ந்தோம் என்பதல்ல. விழும் ஒவ்வொருமுறையும் மீண்டு எழுந்தோம் என்பதே வாழ்வின் பெருமை "

– நெல்சன் மண்டேலா



# நீதித்துறையில் அரச தலையீடு பாதக விளைவை ஏற்படுத்தும்!

## கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் கண்டனம்

**கொழும்பு, ஏப். 5**

**நீதித்துறை சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றமை சர்வதேச ரீதியில் விமர்சனங்களை உருவாக்கும். நாடாளுமன்ற சிறப்புரிமைகளை முன்வைத்து நீதித்துறையின் சுயாதீனத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.**

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை முடக்குவதை தவிர்க்கவேண்டும் என்று நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுகின்றது என்று கூறி நீதிமன்றத்தை சவாலுக்குட்படுத்துவதை அனுமதிக்கமுடியாது.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் அதை மதித்தல் என்பன அனைத்து அரச நிறுவனங்களினதும் கடமையாகும். அவ்வாறிருக்கையில் நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசியல்வாதிகள் செயற்படுகின்றமை சர்வதேசத்தின் மத்தியில் விமர்சனங்களை உருவாக்கும்.

அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைக்கும் ஊடகங்களும் முடக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது. இது கருத்துச் சுதந்திரத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும். இனிவரும் காலங்களில் நாட்டில் அரசமைப்பையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க வேண்டும் , நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும், நாட்டு மக்களின் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

(எ-14)

# புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை விடுமுறை

கொழும்பு, ஏப். 5

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை முதல் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை கல்விச் செயற்பாடுகளின் முதலாம் தவணைக்கான இரண்டாம் கட்டம் ஏப்ரல் 17ஆம் திகதி முதல் மே 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதன்பின்னர் மே 13 ஆம் திகதி முதல் மீண்டும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் மே 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ-14)

**நாளை**

**06.04.2023**
**வியாழக்கிழமை**
**பங்குனி 23**

சுபநேரம் : 07.38 - 09.08
ராகுகாலம் : 01.38 - 03.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் போட்டியில் இலங்கை மௌனித்திருக்கும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 5**

**இந்துமா சமுத்திரத்தில் வல்லரசுகளுக்கிடையிலான போட்டித்தன்மை தீவிரமடைந்துள்ளது. இதில் பக்கச் சார்பின்றி இலங்கை மௌனித்திருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் கடந்த சனிக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

எவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் அவற்றிலிருந்து மீளவேண்டும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதனையும் உறுதிப்படுத்தவேண்டும். போர் நிறைவடைந்ததன் பின்னர் சிறு சிறு பயங்கரவாதச் செயற்பாடுகள் பதிவாகியுள்ளன. இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமையை உறுதிப்படுத்தவேண்டும்.

இவற்றுக்கு அப்பால் தற்போது பிராந்தியத்தில் வல்லரசுகளுக்கிடையிலான போட்டிகள் தீவிரமடைந்துள்ளன. ஆரம்பத்தில் இப்போட்டித்தன்மை பசுபிக் சமுத்திரத்தில் காணப்பட்டபோதிலும், தற்போது இந்து சமுத்திரத்திலும் தாக்கம் செலுத்துகின்றது. வல்லரசுகளுக்கிடையிலான போட்டியில் இயன்றவரை இலங்கையை விலக்கி வைத்திருக்கவே முயற்சிக்கின்றேன் - என்றார். (ம)

# சம்பிக்கவின் புதிய கட்சி மிகவிரைவில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 5

புதிய அரசியல் கட்சி ஒன்றை அடுத்தமாதம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டை திவால் நிலையில் இருந்து காப்பாற்றுவதற்கு, புதியதொரு அரசியல் கட்சி தேவை. அதன்படி 'ஐக்கிய குடியரசு முன்னணி' என்ற கட்சி அறிமுகப்படுத்தப் படும்.

குடும்ப ஆட்சிக்கும் மக்களின் வாக்குகளை லஞ்சம் கொடுத்து வெல்லும் அரசியலுக்கும் இந்தப் புதிய கட்சி முற்றுப்புள்ளி வைக்கும்- என்றார். (ச-இ)

# தாக்குதலுக்குள்ளான மாணவிக்கு உரிய சிகிச்சையளிக்கவில்லை

## ஆளுநரிடம் தாயார் முறைப்பாடு

கிளிநொச்சி, ஏப். 5

தாக்குதலுக்குள்ளான மாணவிக்கு உரிய முறையில் சிகிச்சை வழங்கப்படவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு மாணவியின் தாயார் முறைப்பாடு செய்துள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் குண்டர்கள் புகுந்து தாக்குதல் நடத்தியதில் மாணவி ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குமேற்கொண்ட சிகிச்சையில் தலையில் ஆறுக்கும் மேற்பட்ட தையல் போடப்பட்டது.

எனினும் கிளிநொச்சி மருத்துவமனையில் மாணவியின் தலைப் பகுதி தொடர்பில் 'எக்ஸ்ரே' ஒளிப்படம் எடுக்கப்படவில்லை. அத்துடன் உடலின் ஏனைய பகுதிகளில் காணப்பட்ட காயங்கள் தொடர்பிலும் மருத்துவமனை நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை என்பது தொடர்பில் மாணவியின் தாயாரால் வடமாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவியின் தாயாருடன் ஆளுநர் அலைபேசியில் கலந்துரையாடினார். அதன்போது மாணவியின் சிகிச்சை தொடர்பில் அவரது தாயார் மனவருத்தத்துடன் ஆளுநருக்கு தெரிவித்தார்.

கலந்துரையாடிய பின்னர், மாணவியின் தலைப்பகுதியின் செயற்பாடுகள் தொடர்பில் "எக்ஸ்ரே ஒளிப்படம்" மூலம் மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் இது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையையும் உடனடியாக வழங்குமாறும் கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிப்பாளருக்கு ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

# கறுப்புக்கொடிகளுக்கு விதிக்கப்பட்டது தடை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

அரச மருத்துவமனை வளாகத்தினுள் கறுப்புக்கொடி மற்றும் பதாகைகளைக் காட்சிப்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மருத்துவமனைகளில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுவதால் மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளர்களும் உத்தியோகத்தர்களும் உளரீதியாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# விரைவில் ஆட்சேர்ப்பு இ.போ.ச. அறிவிப்பு

கொழும்பு, ஏப். 5

இலங்கை போக்குவரத்து சபையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கை விரைவில் நடைபெறவுள்ளது என இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவிக்கையில்;

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஆயிரத்து 35 சாரதி வெற்றிடங்களும், 450 நடத்துநர் வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

இந்த வெற்றிடங்களுக்காக முதற்கட்டமாக 800 சாரதிகள் மற்றும் 275 நடத்துநர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் - என்றார். (ச-இ)

# நல்லிணக்க ஆணைக்குழு சட்டம் உருவாக்க அனுமதி

கொழும்பு, ஏப்.5

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமைப்பதற்கான சட்டத்தை உருவாக்குவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தும் மற்றுமொரு முயற்சியாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்கு வகை செய்யும் சட்டத்தின் ஒரு பகுதியை உருவாக்குவதற்கு கோரும் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சர்கள் அலி சப்ரி மற்றும் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் சமர்ப்பித்திருந்த இந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும் தென்னாபிரிக்காவில் நிறவெறி காலத்துக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற ஒன்றை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை காரணமாக 1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்ட எவரும் ஆணைக்குழுவின் முன்னிலையில் சமுகமளிக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். சுபச் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும், உடல் ஆரோக் கியம் மேம்படும். காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கவனம் தேவை. சகோ சங்கடங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். குடும்பத்தில் அமைதி வரும். சங்கடங்களை எதிர்கொள்ள நேரிடும். மனவருத்தங்கள் நீங்கும்.

**துலாம்:** நீங்கள் தொடங்கும் காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். புதிய சேர்க்கை உண்டாகும். ஆதாயம் ஏற்படும். முயற்சிகளைத் தவிர்க்கவும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படும். பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மகரம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் ஏற்படக்கூடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> “கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை
> உண்மையான் உண்டிவ் வுலகு.” -வள்ளுவர்



## கனகச்சிதமான முறையில் அரங்கேற்றப்பட்ட

# புதியதொரு வீடு நாடக ஆற்றுகை




கைதடியூர் நி.ஹரன்


திருமறைக்கலாமன்றத்தின் தயாரிப்பில் கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் மஹாகவியின் 'புதியதொரு வீடு' நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்த நாடகம் ஈழத்தின் புகழ்பூத்த நெறியாளர்களில் ஒருவரான யோ.யோண்சன் ராஜ்குமாரின் நெறியாள்கையில் திருமறைக் கலாமன்ற கலைஞர்களின் பங்களிப்பில் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்தநாடகம் ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர்களில் ஒருவரான 'மஹாகவி' என எல்லோராலும் அறியப்பட்ட உருத்திரமூர்த்தியால் 1969ஆம் ஆண்டில் எழுதப்பட்டுள்ளது.



### கதையும் களமும்

இந்த நாடகத்தின் கதை மீனவக் குடும்பமொன்றினை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. மீன் பிடிக்கச் சென்ற கணவன் புயலின் கொடூர தாண்டவத்தால் காணாமற்போகின்றார். காலம் பல சென்றும் வீடு திரும்பவில்லை. கணவன் உயிரோடு இருக்கின்றானா? இல்லையா? என்பது தொடர்பாக மனைவியால் முடிவெடுக்க முடியாத நிலை வருகின்றது. அவன் வருவான். வருவான் என காத்திருந்து ஏழு வருடங்களுக்கு மேல் கடந்துவிட்டது. மனைவியையும். அவனது பிள்ளையையும் புயலால் காணாமற்போனவனின் தம்பி பராமரித்து வருகின்றான். மூவரும் ஒரே வீட்டில் தங்கியிருப்பதால் ஊர் அவளை தப்பான கண்ணோட்டத்தோடு பார்க்கின்றது. அவளுக்கும் தனது கணவன் மீண்டு வருவாரா? அல்லது வரமாட்டாரா? உயிரோடு இருக்கின்... இல்லையா? என்ற கேள்விக்கு ...யில் பலகாலம் கடந்தும் கிடைக்கவில்லை.. ஊர் தனது ...தையை கேவலமாக பார்க்கின்றது என்ற ...தேவேளை எவ்வளவு காலம்தான் வாழ்க்கைத் துணையின்றி வாழ்வது என்ற ... கணவனின் தம்பியை திருமணம் முடிக்கின்றாள் ...துவாழ்வு வாழத் தொடங்குகின்றாள். அவர்... இருவருக்கும் குழந்தை பிறக்கின்றது. திடீரென ஒருநாள் புயலால் காணாமற்போன கணவன் தனது மனைவியை தேடி வருகின்றான். மனைவியின் மறுதிருமணம் அறிந்து நிலைகுலைந்து ...றான். மனைவியும் செய்வதறியாது வீறிட்டு அழுது புலம்பினாள். இறுதியில் தன்னைத் தானே தேற்றியவாறு மீண்டு வந்த கணவன் மனைவிக்காக ...ாக கொண்டுவந்த பொருள்களை கொடுத்துவிட்டு ... சென்று மீண்டும் தனது ஊரில் தனக்குப் பிடித்த கடற்றொ... ...து மகிழ்வாக புது ... வாழத் தொ... ...இந்த நாடகத்தின் கதைச்சுருக்கமாகும்.

### பாத்திரங்களும் ...

நாடகத்தில் வ... ... மாயன். அவன் மனைவி மயிலி. அவன் மகன் மன்னவன். அவன் தம்பி மாசிலன். அவன் அயலாள் மையுண்ட நெடுங் கண்ணாத்தை. அவன் ஊர்க்கோயில் மடத்தவர்மறைக்காடர், மற்றும் மீனவர்கள் போன்ற பாத்திரங்கள் காணப்பட்டன. மீனவக் குடும்பத்தின் மனைவியாக நடித்தவரின் நடிப்பு மிகவும் பாராட்டப்படும் விதமாக அமைந்திருந்தது. புயலால் காணாமற்போன மீனவத் தலைவன் மற்றும் அவனது தம்பியின் நடிப்பும்கூட மிகவும் சிறப்பாக காணப்பட்டது. அதேபோல் ஊர்க்கோயில் மடத்தவராக பாத்திரமேற்று நடித்தவரின் நடிப்பு யதார்த்தமாக அமைந்திருந்தது. மகனாக நடித்த சிறுவன் வயதுக்கேற்ற தனது நடிப்பினை வெளிப்படுத்தியிருந்தான். மீனவர்களாக நடித்தவர்களும் தம்மாலான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். இருந்தபோதிலும் அயலவளாக கண்ணாத்தை பாத்திரமேற்று நடித்தவரின் நடிப்பு பார்வையாளரை மிகவும் கவர்ந்திருந்தது. குறிப்பாக அவளது ஏளனப் பேச்சுக்கள். சந்தேகப் பார்வைகள். மற்றவருக்கு கோபத்தையும் அதேவேளை வருத்தத்தையும் தூண்டும் வார்த்தைகள். முகசுளிப்புக்கள் மற்றும் உடல் மொழி மிகவும் ரசிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தன. மேலும் நாடகத்தின் பாடகர்களாக செயற்பட்டவர்கள் இடையிடையே மேடைக்கு வந்து நடித்து நாடகக் கதையை நகர்த்திச் சென்ற விதம் உண்மையில் பாராட்டத்தக்கது. நாடகத்தின் ஒப்பனை மிகவும் எளிதாக யதார்த்தமாக அமைந்திருந்தது. கண்ணாத்தை பாத்திரத்தின் தலைமுடி இடையிடையே நரைத்து இருக்கும் வண்ணம் ஒப்பனை செய்யப்பட்டிருந்தது. பெண் பாத்திரங்களாக நடித்தவர்கள் தலைமயிரை குடுமியாக முடிந்து ஒப்பனை செய்திருந்தனர். குடும்பத் தலைவியின் ஒப்பனையும் யதார்த்தமாக அமைந்திருந்தது. திருமணக் காட்சியில் அனைவரும் தமிழ் கலாசார உடையணிந்து குறிப்பாக பெண்கள் நகைகள் மற்றும் தலையிலே பூ மாலை சூடியிருக்கும் வண்ணம் ஒப்பனை செய்திருந்தனர். ஊர்க்கோயில் மடத்தவரின் தலைமுடி இடையிடையே நரை முடியாக இருப்பது போல் காட்சியளித்தது. அவரது நெற்றியில் திருநீற்றுக் குறியும் சந்தனப் பொட்டும் காணப்பட்டது. புயலால் காணாமற்போன மீனவனாக நடித்தவர் சிறுதாடி மற்றும் மீசை வைத்திருந்தார். மீனவர்களாக நடித்தவர்களின் கைகளில் வளையம் போல் அணிகலன் அணியப்பட்டிருந்தது.

### காட்சியமைப்பு

...காட்சியமைப்பு பற்றிப் பார்ப்போமாக இருந்தால் அரங்கின் இடது புறமாக பனைமட்டையால் அழகாக வரி... ...தென்னங் கிடுகினால் வேயப்பட்ட கூரை கொண்ட சிறிய வீடு பிரதா... ...யமைப்பாக இருந்தது. வீட்டின் பின்புறமாக கடல் போன்றதாக காட்சி அமைக்கப்பட்டிருந்தது. கடலலைகள் அசைவதை... ...நிற சேலையை பயன்படுத்தி காட்சி அமைக்கப்... ...ரங்கின் மேல் வலது மூலையாக கட்டுமரம் ஒன்று ... ...வாசி தெரிவது போல் காட்சியமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறான காட்சியமைப்பு உண்மையில் கடற்கரைக் காட்சியை கண்முன்னே கொண்டு வந்திருந்தது. கோயில் புறமாக காட்சி நடைபெறுவதைக் காட்ட ... ...கொண்ட இரு தூண்கள் மேடையின் ...இருப்பதாக காட்சி அமைக்கப்பட்டிருந்தது. மயிலி... ...முடிந்து குழந்தை ஒன்று இருப்பதைக் காட்... ...பக்கவாட்டாக ஏணை ...

பாத்திரங்க... ...

... ...றை அமைதியான முறையில் செய்யப்பட்டிருந்தது.

இசையமைப்பு நாடகத்துக்கு இனிமை சேர்த்தது. நாடகத்தின் கதையை நகர்த்திச் செல்ல இசை மிகவும் உந்து சக்தியாக அமைந்திருந்தது. கீபோட், தபேலா, ட்றம் போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தி நாடகத்துக்கு இசை வழங்கப்பட்டிருந்தது.

**சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்**
**சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்**
**கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்**
**கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று காணும்**

எனும் பாடலும் அதற்கான இசையும் நாடகத்துக்குப் பெருமை சேர்த்தது. இப் பாடலுக்கு அமைக்கப்பட்ட இசையே கரு இசை போல் நாடகத்தில் ஆங்காங்கே வந்து போனது. கடலில் வலை இழுத்து மீன் பிடிக்கும்போது பாடப்பட்ட பாடல் மற்றும் திருமணக் காட்சியின் போது பாடப்பட்ட பாடல்களும் நாடகத்துக்கு வலிமை சேர்த்தன. இடி இடித்தல், புயல் காற்று வீசுதல், கோயில் மணி ஒலித்தல், குருவிகளின் ஓசை, வானொலிச் சத்தம் போன்றவற்றைக்காட்ட வழங்கப்பட்ட ஒலி விளைவுகள் நாடகத்தை உயிர்ப்புடன் வைத்திருந்தன. எனினும் பாத்திரங்கள் உரையாடும்வேளை சற்று சத்தமாக சில இடங்களில் பின்னணிப் பாடல் பாடப்பட்டு இசை அமைக்கப்பட்டதால் பாத்திரங்களின் உரையாடலை சில சமயம் என்னவென்று விளங்கிக்கொள்ள முடியாத நிலை தென்பட்டது. இதனையும் கருத்தில் எடுத்து இசையமைப்பு செய்யப்படும்போது நாடகம் இன்னும் சிறப்பாக இருக்கும்.

### சிறந்த ஒளியமைப்பு

நாடகத்தின் ஒளியமைப்பு பற்றிப் பார்ப்போமாக இருந்தால் பார்வையாளர் பகுதி முற்றாக இருளாக்கப்பட்டு நாடகம் ஆற்றுகை செய்யப்படும் மேடை மட்டும் தெரியும் வகையில் ஒளியமைப்பு செய்யப்பட்டிருந்தது. இந்த உத்தி பார்வையாளரை நாடகம் பார்ப்பதற்கான ஆர்வத்தூண்டலை ஏற்படுத்தியிருந்தது. நாடகம் சோக உணர்வை பெரும்பாலும் உணர்த்துவதாக இருந்ததால் அதற்கேற்றவாறு ஒளியமைப்பும் ... அல்லாமல் சற்று மங்கலான முறையில் அமைந்திருந்தமை பாராட்டுக்குரியது. மீனவர்கள் கடற்றொழி... ...படும்போது திடீரென இடிமின்னலுடன் புயல் வந்து மீனவர்கள் கடலில் தத்தளிப்பதுபோல காட்சி அமைக்கும்போது விசேட ஒளியைப் பயன்படுத்தி மின்னல் போன்று ஒளி அமைக்கப்பட்டமை சிறப்புக்குரியது. விடியற்காலை, மதியம், மாலை மற்றும் இரவு வேளைகளை உணர்த்த ஒளியமைப்பில் இன்னும் சற்றுக் கவனம் செலுத்தியிருந்தால் நாடகம் மேலும் சிறப்புறும். அரங்கப் பொருள்கள் பலவற்றை பயன்படுத்தி நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தமை நாடகத்துக்கு மேலும் ...தை ஏற்படுத்தியிருந்தது. அந்த வகையில் மீன் வலை. தூண்டில். மீன் பறி. சவல். சாப்பாட்டு தட்டு. தண்ணீர் செம்பு. மண்சட்டி. குத்துவிளக்கு. தேங்காய். மாவிலை. வாழையிலை. சைக்கிள். கைப்பை. ...பாய். ஓலைப்பெட்டி. வானொலிப்பெட்டி. சுளகு போன்றன அரங்கப் பொருள்களாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மற்றும் நாடகத்தை சோக உணர்வை தூண்டும் ... ...த்தை ஏற்படுத்தும் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினை நா.க. குமாரசூரியர்
ஓய்வுநிலை அஞ்சலதிபர்
சமாதான நீதிவான்
நயினாதீவு

# நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மகா கும்பாபிஷேகம்

சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தில் அமர்ந்து வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் உலக மாதாவாகிய அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் புண்ணிய பூமி நயினாதீவு. புராண இதி காசங்களில் இந்தத் தீவு "மணிபல்லவம்" எனப் போற்றப் படுகின்றது.

"கடுகு சிறியதெனினும் இதன் காரம் பெரிது" என்ற பழமொழிக்கிணங்க அளவால் சிறியதெனினும் தொல் புகழால் தலைசிறந்த தீவாக விளங்குகின்றது.

**"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"** என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கமைவாகப் பல ஆலயங்கள் நிறைந்ததும் இத் தீவாகும்.

மெய்யடியார்களுக்கு அருள்மழை பொழியும் ஸ்ரீநாகபூஷணி அம்மனின் தென்திசையில் "செம்மணத்தம்புலம்" என அடியார்களால் அழைக்கப்படும் அழகிய பதியில் பன்னெடுங்காலமாக அடியார்கள் போற்றிப் புகழ்ந்து வழிபட்ட காரணத்தால் வேண்டுவார் வேண்டுவதை அள்ளிக்கொடுக்கும் அருள்மிகு செம்மணத்தம்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றார்.

அருள்பாலிக்கும் ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானின் "மகா கும்பாபிஷேகம்" இன்று 05 ஆம் திகதி புதன்கிழமை சிறப்புடன் நடைபெறும். கும்பாபிஷேகம் என்பது பல்வேறுபட்ட குறைபாடுகளும் நீங்கி இறைவனது திருவருள் பாலிக்குமாறு செய்யும் பெருஞ்சாந்தியாகும்.

இச்சாந்தியானது உரிய காலங்களில் செய்யப்படவேண்டியது இன்றியமையாதது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பாபிஷேகம் சகல விதமான தோஷங்களையும் நீக்கும்.

ஆலயங்களில் நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற மக்கள் நிம்மதியாக வாழ்வார்கள் இறையருள் கிட்டும். கும்பாபிஷேகம் எல்லாவற்றையும் விடச் சிறந்த கிரியையாகும்.

இதனால் அடியார்களுக்குப் பேரானந்தப் பெருவாழ்வும், கோடி புண்ணியமும் கிடைக்கும் என்பது ஆன்றோர் வாக்காகும். கும்பாபிஷேகத்தை மெய்யன்போடு தரிசனம் செய்பவர்களுக்கு முன்செய்த தீவினைகள் எல்லாம் நீங்கப்பெற்று எல்லா நலன்களும் உண்டாகும். மகா கும்பாபிஷேகத்தைப் பெருஞ்சாந்தி என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

"செம்மணத்தம்புலம்" பதியமர்ந்து அடியார்களுக்கு நல்லன பல தரும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் ஆலயம் சிறப்புற அமைந்துள்ளது.

இவ்அருள்மிகு ஆலயம் அடியார்களின் பெருமுயற்சியினாலும், சிவதர்மம் தழைத்தோங்க வாரி வழங்கும் மெய்யடியார்களின் பெரு நிதியுதவியினாலும் பல திருப்பணி வேலைகள் - நிறைவேற்றப்பட்டு புதுப்பிக்கப்பட்டு அழகுறக் காட்சியளிக்கின்றது.

**'நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல்லருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்**

என்ற ஆன்றோர் வாக்குக்கு அமைவாக மெய்யன்பர்களுடைய நிதியுதவியைக் கொண்டு சிறப்புற அமைந்துள்ளது. இப்பெருமானது பெரும்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அறங்காவலர் சபையின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்புமே காரணமாகும். ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானின் அறங்காவலர் சபையும் புலம்பெயர்ந்து சிறப்புற வாழ்ந்து கொண்டிருக்கும் நயினை மக்களும் அடியாளர்களும் மகா கும்பாபிஷேகத்தைக் காண்பது பெரும் மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

**"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து"**

**"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில்
நல்ல கதிக்கும் யாதுமோர் குறைவில்லை"**

**"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே"**

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆதீன குருவும், விநாயகர் ஆலய உற்சவ குருவுமான சிவஸ்ரீ ஐ.கைலாச வாமதேவ குருக்களும் மகா கும்பாபிஷேக கிரியைகளைச் சிறப்புடன் நடத்தவுள்ளார். இன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற செம்மணத்தம்புலம் ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

**"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"**

---

# மரபுசார் உணவுக் கொண்டாட்டம்

முன்னோர் நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு மரபுசார் உணவுகளே அடித்தளமாக இருந்தது. ஆனால், இன்று நாங்கள் காலனித்துவ பொருளாதாரத்துக்குள் சிக்கி எமது ஆரோக்கியமான வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருப்பதால் விழிப்புணர்வாக பெண்களின் மரபுசார் உணவுக் கொண்டாட்டம் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இலுப்பைக்கடவை தமிழ் வித்தியாலயத்தில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

மேற்படி நிகழ்வில் பாலியாறு, இலுப்பைக்கடவை, பறங்கிகமம், கள்ளியடி, சவிரிகுளம், இத்திக்கண்டல் மற்றும் வேட்டையான்முறிப்பு ஆகிய மாதர் சங்கங்கள் தங்களது மரபுசார் உணவுப் பொருள்களை பார்வைக்கு வைத்திருந்ததுடன் அவர்களது மரபுசார் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நடைபெற்ற மரபுசார் உணவுக் கொண்டாட்டமானது எங்களால் மறக்கப்பட்ட மறைக்கப்பட்ட உணவுகளின் மகத்துவத்தை உணர்த்துவதும் அவற்றை எதிர்கால சந்ததிக்கு அறிமுகப்படுத்தவும் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச்செயலர், மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர், மாதர் அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய-60)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 09 . 1936



மறைவு
03 . 04 . 2023

## கனகசபை சண்முகலிங்கம்

### (இளைப்பாறிய காசாளர், பல நோ.கூ.ச. கொடிகாமம்)

அல்லாரை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கனகசபை சண்முகலிங்கம் கடந்த (03.04.2023) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - கற்பகப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், இராகுலன் (கனடா), அகிலன் (கனடா), காலஞ்சென்ற அரவிந்தன் (இலண்டன்) மற்றும் சண்சுதர்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகி, வள்ளிநாயகி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நந்தினி (கனடா), ஆனந்தி (கனடா), சசி (இலண்டன்), வாணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகன், நிரூஜன், பிரவீன், பிரியங்கா, வார்சிகன், யதுர்சிகன், கபிசன், அனுசன், சந்தியா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR/39603) A-1

இராகுலன் - 0016 475 69 9036, அகிலன் - 0016 478 861782
சண்சுதர்சன் - 0061 405 101932, 076 036 8403

# திருமணம், காதல், மணமுறிவு

காலையும் மாலையும் காதலே செய்யலாம்
காளையும் வாலையும் காதலே செய்யலாம்
காளையும் வாலையும் மாலையும் மாற்றலாம்
காளையும் வாலையும் தாலியும் கட்டலாம்
கட்டிய வாலையும் ஆங்கிருக்கப் பார்க்காது
கட்டிய தாலியும் தான்கழற் றாமலே
காளையும் வாலையும் காதலே செய்யலாம்
காளையும் வாலையும் காதலிக்க ஏதுவுந்தும்
கண்கள் பலகண்ட தாலிகட்டும் காட்சியின்பின்
கண்களால் காதலித்துப் பார்ப்பது நன்றென்று
கண்ணதாசன் சொன்னதென்று உள்ளத்தில் குந்திய
கண்ணதாசன் பேச்சுந்தக் காதலாம் வந்திருக்கும்
காதலித்தான் காளையவன் மூன்றாம் ஒருத்தியை
காதலித்தாள் வாலையவள் மூன்றாம் ஒருவனையே
காதலித்தார் சந்திப்பும் வந்திச்சாம் பண்ணையிலே
காதலித்தார் சந்தித்தாம் முண்டியடித் தாம்மோதி
காதல்வந் தாம்பிரித்து வைத்திட்ட கூத்தாலே
தாலியறுத் துப்பிரிந்து சென்று.

யாழ்பாவாணன், மாதகல்



கே.எஸ்.சிவஞானராஜா



# கண்களுக்கு விருந்தாக மிருதங்க அரங்கேற்றம்!

மனித இனம் புனிதமடைவதற்காக இறைவனால் வரமாக அருளப்பட்ட திருவருட்பேறுதான் இசையாகும். ஓசை ஒலியாகவே இறைவன் எங்கும் எதிலும் எப்பொழுதும் அருவமாக ஒளிர்கின்றான். அதனை நாம் அனுபவிக்கும் போது அனைவருமே பரவசமாகிப் பேரின்பம் அடைகின்றோம். இஃது குரலினாலும் விரலினாலும் மட்டுமே சாத்தியமாகிறது. இவ்வாறானதொரு மனோலயமான மிருதங்க அரங்கேற்றம், நீராவியடி இலங்கைவேந்தன் கல்லூரி மண்டபத்தில் கடந்த 12ஆம் திகதி பிற்பகல் கனகச்சிதமாக அரங்கேறியது. செல்வன் ஜெயகீத சர்மாவின் மிருதங்க அரங்கேற்றமே நல்லைக் கந்தனை அரங்கத்தில் கொலுவேற்றியது.

இலங்கையில் பல மிருதங்க லய விற்பன்னர்களை உருவாக்கி அரங்கேற்றிய மிருதங்க ஞான வாரிதி, இசைமாணி சி.துரைராஜாவினது பயபக்தியான சீடனான செல்வன் ஜெயகீதசர்மா, சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக முறையாக மிருதங்கக் கலையை மிகுந்த ஆர்வத்துடன் பயின்று அரங்கேற்றத்தினை சுபீட்சமெனச் சோபிக்கச் செய்து ரசிகர்களின் கரகோஷங்களைத் தம் வசமாக்கினார்.

வேத மந்திர பூஜை ஆராதனைகளோடும், மாதா, பிதா, குரு, தெய்வ ஆசீர்வாதங்களோடும், வசந்தா இராக வர்ணம், குரலிசை வாணன் இசைமாணி தவநாதன் றொபேட்டின் குரலில் திரிகாலங்களாகத் தவழ்ந்து, மண்டபத்தைக் கட்டிப் போட்டு இரசிக்க வைத்தது. வசந்தா இராகம் படித்தவர்களையும், பாமர மக்களையும் வசமாக்கி கைது செய்யும் இராகமாகும். ஆம்! நாமும் கைதாகி, தொடர்ந்து பாடிய பௌதாரி இராக உருப்படி கற்பனா ஸ்வர தீர்மானத்தோடு விடுதலை ஆனோம். சுருதி லயம் பிசகாத மிருதங்க வாசிப்பு ஜெயகீதசர்மாவின் விரல்களுக்கு மோதிரம் அணிவித்ததைப் போன்று கண்களைக் கௌவி இழுத்து விடுவித்தது. சபாஷ், ஜதிகள் பிசகாத புதினமாய்ப் பூத்த கை. புண்ணியமான கை. மேலும், மிருதங்க வாசிப்போடு சமாந்தரமாக ஈடுகொடுத்து வயலின், கடம், முகர்சிங், கெஞ்சிரா கலைஞர்களும் அனுசரித்து வாசித்து அரங்கேற்றத்தினை முழுமை பெறச் செய்தமை மாதா, பிதா, குரு ஆகியோரின் தவவலிமையேயாகும். புண்ணியம் கற்பனையாகப் பூத்து விரல்களில் விளையாடியது. நீண்டகால அனுபவமும் ஆட்சியும் கொண்ட வயலின் வித்துவான் அ.ஜெயராமனும் பல்துறை வித்தகரும் கெஞ்சிரா கலைஞனுமாகிய ப.சியாம்கி



ருஷ்ணாவும், மூத்த கலைஞனும் கட வித்துவானுமாகிய க.சிவகுமாரும், நாத அலைகளை முகர் சிங் இசைக் கருவிமூலம் அதிசயமாக்கும் முகர்சிங் வித்துவான் க.நந்தகுமாரும், தம்புரா ஞானக் கலைஞன் க.ரஜீவனும், அரங்கேற்ற நாயகனாம் ஜெயகீதசர்மாவுக்கு ஆன்மார்த்த பரமார்த்த அனுகூல உபகாரங்களையும் அட்சரம் பிசகாத கல்பித கற்பனைகளையும் விருப்போடு நல்கி, உரிய பொறுப்பினைப் பேறாக்கி சபைக்கு விருந்தாக்கினர். முறையே, இராக உருப்படிகள் சபையை நிமிர வைத்து சபைக்கு நிவாரணமளித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தவ.தஜேந்திரனின் காண்பியக்கலைக் காட்சி

# சங்கரத்தையில் ஒரு காண்பியக் காட்சி!





யாழ்ப்பாணம், சங்கரத்தை துணவி சந்திக்கு அருகாமையில் உள்ள நாச்சார் வீட்டில் காண்பியக்கலை கண்காட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் - இருபாலையைச் சேர்ந்த சமகால காண்பியக் கலைஞனான தவராசா தஜேந்திரன் என்பவரது காண்பியக்கலை ஓவியங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கண்காட்சியில் கவிதை, ஓவியம், தியானம் ஆகிய மூன்றையும் ஒன்றிணைத்த பரிசோதனைகள் மூலம் பெறப்பட்ட படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சாம்பல், தூசி துணிக்கைகள் ஆகிய மூலப் பொருள்களைப் பயன்படுத்தி இந்தப் படைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.







மருத்துவர் வில்லியம் கபிரியேல் றொக்வூட்டின் 180ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

ந.பரமேஸ்வரன்



# மருத்துவர் வில்லியம் கபிரியேல் றொக்வூட்

# இலங்கையின் மருத்துவத்துறையில் தவிர்க்கமுடியாத பேரொளி!

இலங்கையின் மருத்துவத் துறையிலும், பொதுவாழ்விலும் தன்னிகரற்ற அரும் பெரும் பணிகளை ஆற்றிய மருத்துவர் வில்லியம் கபிரியேல் றொக்வூட் தொடர்பான தேடலை, புரிதலை இன்றைய இளம் சந்ததியினரும் மாணவர்களும் தமக்குள் வளர்த்துக்கொள்ளவேண்டியது மிகமிக அவசியமானதாகும்.

மருத்துவர் வில்லியம் கபிரியேல் றொக்வூட் 1843ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை பெருமாள் பிள்ளை காரைக்காலிலிருந்து வந்து அளவெட்டியில் பெருந்தனவந்தரின் மகளான வைரவியை திருமணம் செய்து கொண்டார். பிறப்பால் சைவ சமயத்தைச்சேர்ந்த இவர்கள் 1831ஆம் ஆண்டு தெல்லிப்பழையில் வைத்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.

மருத்துவர் வில்லியம் கபிரியேல் றொக்வூட் வேம்படி பாடசாலையில் (ஆரம்பத்தில் வேம்படி மகளிர் பாடசாலை இருபாலாருக்கு முரியதாகவே. மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்படும் வரை இயங்கியது.) 1851 முதல் 1855 வரை. 8 வயது முதல் 12 வயது வரை கல்வி பயின்ற றொக்வூட் தந்தையார் மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றதைத்தொடர்ந்து மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

[illegible] 20ஆவது வய[illegible]

[illegible]

துவப் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்ததும் சென்னை மருத்துவக்கல்லூரி பரீட்சகராக நியமிக்கப்பட்டார். இலங்கையில் மட்டுமல்ல கிழக்கிலேயே சிறந்த மருத்துவர் என்ற பாராட்டைப்பெற்ற றொக்வூட் பிரித்தானிய மருத்துவக்கழகத்தின் இலங்கை கிளைத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். புத்தளம், யாழ்ப்பணம், அம்பாந்தோட்டை, கம்பொல பிரதேசங்களில் சிறப்பான முறையில் சேவையாற்றிய றொக்வூட் யாழ்ப்பாணத்தை வாந்திபேதி தாக்கியபோது புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். யாழ்ப்பாணத்தில் வாந்திபேதியை கட்டுப்படுத்துவதில் றொக்வூட்டின் பங்களிப்பு மிகப்பெரிதாக இருந்தது.

1878ஆம் ஆண்டு தனது 35ஆவது வயதில் கொழும்பு மருத்துவமனையின் பிரதான அறுவைச் சிகிச்சை நிபுணராக பதவியேற்றார். 20 வருடங்கள் அறுவைச் சிகிச்சை நிபுணராக கடமையாற்றிய காலத்தில் கொழும்பு மருத்துவக்கல்லூரியில் அறுவைச் சிகிச்சை விரிவுரையாளராகவும் [illegible]மையாற்றியுள்ளார்.

[illegible] ஆண்டு லண்டனுக்கு பயண[illegible] றொக்வூட் பிரித்தானிய றோயல் [illegible] மருத்துவர் [illegible] சத்திர [illegible] [illegible] ஆண்டு கொழும்பு மருத்துவமனையில் சத்திர சிகிச்சை ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை சட்டசபை தமிழ் பிரதிநிதியான சேர் முத்துக்குமாரசாமி காலமானதைத் தொடர்ந்து அப்போதைய ஆளுநர் சேர். வெஸ்ற் றிட்ஜ்வே. றொக்வூட்டை சட்டசபை தமிழ் பிரதிநிதியாக நியமித்தார். 1899ஆம் ஆண்டு நீதிபதிகளின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டுமென்ற பிரேரணையை சட்டசபையில் கொண்டு வந்தார் றொக்வூட். தனது பதவிக்காலத்தில் சிறப்பான சேவையாற்றி அனைத்து இன மக்களினதும் பாராட்டைப் பெற்றார். புத்தளம் வரையான [illegible] பூர்த்தியாக்கப்பட்டபோது புகையிரதச்சேவை யாழ்ப்பாணம் வரை விஸ்தரிக்கப்பட வேண்டுமென றொக்வூட் வலியுறுத்தினார்.

1903ஆம் ஆண்டு இரண்டாவது த[illegible]யாகவும் சட்டசபை பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட றொக்வூட் 1906ஆம் ஆண்டு பொதுவாழ்விலிருந்து [illegible] 1925ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி றொக்வூட் காலமானார். சத்திரசிகிச்சையில் விசேட திறமையைக் காண்பி[illegible] மருத்துவர்களுக்கு றொக்வூட் [illegible] பரிசு இப்போதும் வழங்கப்பட்டு வருகி[illegible]. அத்துடன், அன்னாரின் நி[illegible] கொழும்பு மருத்துவமனையில் நோயாளர் தங்குமண்டபம் ஒன்றும் அன்னாரின் குடும்பத்தினரால் அமைக்கப்[illegible] சிறப்பம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தச் செலவிலேயே சிவலிங்கம் வைப்பேன்

## கூறுகிறார் ஜீவன் தொண்டமான்

**கிளிநொச்சி, ஏப். 5**

**இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மற்றொரு வாய்ப்பைக் கொடுத்துப் பார்ப்போம். வெடுக்குநாறி மலை விவகாரத்தில் நீதி மன்ற வழக்கு முடிவடைந்ததும் எனது சொந்தச் செலவில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வேன். இவ்வாறு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

இரணைமடுக் குளத்தின் குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெடுக்குநாறி மலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் சென்றிருந்தோம். அங்கு ஆலயத்தின் ஆவணங்கள் காணப்படவில்லை.

அதிகாரிகள் ஒரு பக்கச் சார்பாக நடந்து கொண்டனர். நீதிமன்றில் வழக்கு இருப்பதால் அதனைத் தொடர முடியவில்லை. இந்த விடயத்தை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடவுள்ளோம்.

எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்ற வழக்கு நிறைவுற்றதும் எனது சொந்தச் செலவில் சிவலிங்கத்தை வழங்கவுள்ளேன்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பல அநீதிகள் நடந்திருக்கின்றன. எதிர்காலத்தில் மக்களுக்கு இவ்வாறான கொடுமை நடைபெறலாகாது. புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் நாடாளுமன்றத்துக்கு வரும்போது கூடிப் பேசி முடிவெடுப்போம்.

மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இருக்கும்போது அரசாங்கத்துக்குள் இருந்தே பல விடயங்களை எதிர்த்துள்ளார்.

அதனால் அரசாங்கத்தை எதிர்ப்பது எங்களுக்கு புதிது கிடையாது- என்றார். (ச-113)



# முட்டாள்கள் தினத்தில் புகைத்தல் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஏப். 5

புகைப்பிடிப்போருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள் சர்வதேச முட்டாள்கள் தினமான கடந்த சனிக்கிழமை போதைப்பொருள் தகவல் நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டது.

'இன்னமும் சிகரெட் புகைக்கும் உங்களில் சிலருக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்' எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் இந்த விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன.

சர்வதேச முட்டாள்கள் தினத்தில் சிகரெட் புகைப்பவர்களை அறிவுள்ள முட்டாள்களாகக் கருதி அவர்களை அதிலிருந்து விடுவிக்கும் வகையில் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. (ச-இ)



# அமைச்சர்களின் செயல் நியாயமானதல்ல!

யாழ்ப்பாணம், ஏப். 5

வெடுக்குநாறிமலையில் திருவுருவச்சிலைகளை அமைச்சர்கள் பிரதிஷ்டை செய்யாதிருப்பதற்கு நீதிமன்றின் நடவடிக்கையைத் துணைக்கிழுப்பது நியாயமானதல்ல - என்று இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது.

வெடுக்குநாறிமலையில் திருவுருவச்சிலைகளை அமைச்சர்கள் பிரதிஷ்டை செய்யாதிருப்பதற்கு நீதிமன்றின் நடவடிக்கையைத் துணைக்கிழுப்பது நியாயமானதல்ல. நீதிமன்றத்துக்கு அமைச்சர்கள் அவசர இடைமனு ஒன்றைத் தாக்கல்செய்து வெடுக்குநாறிமலையிலிருந்து திருவுருவங்கள் அகற்றப்பட்டதைத் தெரிவித்திருந்தால் நீதிமன்றம் இதனை உடனடியாகத் தீர்த்து வைத்திருக்கும் - என்றுள்ளது. (அ-ம)

# தங்கம் வென்றது சந்திர பரத கலாலயம்

யாழ்ப்பாணம், ஏப். 5

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் 53ஆவது ஆண்டை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட கிராமிய குழு நடனப் போட்டியில் பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவர்கள் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டனர். பொன்னாலை சந்திர பரத கலாலய இயக்குநரான 'கலைச்சுடர்' சிறீதேவி கண்ணதாசனின் நெறியாள்கையில் போட்டியில் கலந்துகொண்டு மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றனர். மாணவர்களுக்கான தங்கப்பதக்கம் "இன்னிசைக்குரலோன்" பொன்.சுபாஸ்சந்திரன் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் , தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி.ஆறுதிருமுருகனால் வழங்கப்பட்டது. (ஒ-14)

# விமான நிலையக் காணி சுவீகரிப்பு விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 4

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விஸ்தரிப்புக்காக தெல்லிப்பழைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி தெற்கு, பலாலி தெற்கு, பலாலி மேற்கு, குரும்பசிட்டி ஆகிய சில கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

காணி சுவீகரிப்புக்கான காணி உரிமையாளர்களுக்கு காணி எடுத்தல் சட்டம் பிரிவு 9 இன் கீழ் ஆவணங்கள் பரிசீலனை மற்றும் நட்ட ஈட்டுக் கோரிக்கை தொடர்பான விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை, இன்று புதன்கிழமை, நாளை வியாழக்கிழமை ஆகிய தினங்களில் முற்பகல் 9 மணி முதல் தெல்லிப்பழைப் பிரதேசசெயலகத்தில் நடைபெறவுள்ளது.

காணி உரிமையாளர்கள் தங்களது ஆவணங்களுடன் வருகை தந்து கோரிக்கைகளை முன்வைக்க முடியும் எனத் தெல்லிப்பழைப் பிரதேசசெயலக நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-14-66)

# குருத்தோலை ஞாயிறு பவனி

மன்னார், ஏப்.5

மன்னார் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு அண்மையில் கொண்டாப்பட்டது.

பக்தர்கள் விற்றரிஸ் வளாகத்திலிருந்து குருத்தோலைகளைக் கைகளில் ஏந்திய வண்ணம் ஆரம்பித்து புனித வெற்றி அன்னை ஆலய வளாகத்தைச் சென்றடைந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். பேசாலை பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஏற்பாட்டில் அமலமரி தியாகி சபை மறைபோதகர் அருட்பணி ப.ஜெறோம் லெம்பேட் அடிகளாரின் பங்கேற்றலுடன் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ச-60)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாட்டைத் தீக்கிரையாக்கும்

## சிறீதரன் எம்.பி. சீற்றம்

தமிழர்களின் இயல்புவாழ்வை அச்சத்தின் பிடிக்குள்ளேயே வைத்திருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்று கொடுங்கோல் சட்டமாக மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறையானால் இலங்கைத்தீவையே அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரமந்தனாறு வட்டாரக் கிளைக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது.

இலங்கை சுமார் 30 வருடகாலமாகக் கொடூரமான போரைச் சந்தித்ததுடன் போர் நிறைவுற்று வருடங்கள் பல கடந்த பின்பும் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோருவது பயங்கரவாதமாகப் பார்க்கப்படுகிறது. ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமக்கு விரோதமானவர்களுக்கு எதிராகப் பிரயோகித்து நசுக்குவதற்கான கருவியாகப் பயன்படுத்துகிறது. இன்றளவும் தமிழர்களின் இயல்புவாழ்வை அச்சத்தின் பிடிக்குள்ளேயே பயங்கரவாதத் தடைச் சட்டம் வைத்திருக்கிறது. தற்போது சிங்கள மக்கள் பக்கமும் மடைமாற்றம் பெற்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை ஒழிப்பதாக சர்வதேசத்துக்கு கூறி புதியதொரு பயங்கரவாத சட்டம் முன்மொழியப்படவுள்ளது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருமானால் அது இலங்கைத் தீவை முற்றாக அழித்து தீக்கிரையாக்கும் - என்றார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை குறைந்தும் படகுக் கட்டணம் மாறவில்லை

## பொதுமக்கள் கவலை

**யாழ்ப்பாணம், ஏப். 5**
**எரிபொருள் கட்டணங்கள் அண்மையில் குறைக்கப்பட்டுள்ளபோதும் படகுச் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

கடந்த 31 ஆம் திகதி முதல் எரிபொருள் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. அதன்பின்னர் போக்குவரத்துக் கட்டணங்கள் 12.9 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும், ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து அனலைதீவு மற்றும் எழுவைதீவு போன்ற இடங்களுக்கும் குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய இடங்களுக்கும் நடத்தப்படும் படகுச் சேவைக் கட்டணங்கள் குறைக்கப்படவில்லை எனப் பயணிகள் தெரிவித்துள்ளனர். நாளாந்தம் படகுச் சேவையைப் பயன்படுத்தும் மக்கள் இதனால் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள பயணிகள், படகுக் கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 5
மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகன் ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் வலி. தெற்குப் பிரதேசசெயலாளரின் தலைமையில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கூட்டத்தில் ஆலயத்தின் அனைத்துப் பரிபாலனசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-7)

## மணிவிழா

யாழ்ப்பாணம், ஏப். 5
வாழ்வக நிறுவனத்தின் வாழ்நாள் தலைவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளருமான ஆறுமுகம் ரவீந்திரனின் மணிவிழா, சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வக நிறுவனத்தின் செல்லா மண்டபத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் விழா நாயகர் கௌரவிப்பு இடம்பெறுவதோடு மணிவிழா மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (எ-14)

# உலக உணவுத் திட்டத்தால் 3 லட்சம் பேருக்கு உணவு!

## எதிர்வரும் வாரங்களில் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 5
எதிர்வரும் வாரங்களில் 3 லட்சம் பேருக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.
நாட்டில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருப்போருக்குக் கடந்த மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள உதவிகள் மற்றும் தேவையான நிதியுதவி என்பன குறித்து உலக உணவுத்திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள மாதாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் உள்ளதாவது:-
நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதன்விளைவாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.
நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களான் உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, யுனிசெப் அமைப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு சர்வதேச பொதுக்கட்டமைப்புக்கள் அத்தியாவசிய உதவிகளை வழங்கி வருகின்றன. பொருண்மியம் நலிந்த மக்களுக்கு உணவுப் பொருள்கள், நிதி என்பன வழங்கப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கான உணவுகள் வழங்கப்படுகின்றன.
இவ்வாறானதொரு பின்னணியில் நிதி அல்லது வேறு வழிமுறைகள் மூலமான உணவுப்பொருள்சார் உதவிகள், பாடசாலை உணவு மற்றும் போசணை சார் உதவிகள் ஆகிய மூன்று வழிகளில் நாடளாவிய ரீதியில் சுமார் 3.4 மில்லியன் மக்களுக்கான அவசர உதவிகளை வழங்குவதற்கு உலக உணவுத்திட்டம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.
அந்தவகையில் எதிர்வரும் வாரங்களில் 3 லட்சம் பேருக்கு அவசியமான உணவுப்பொருள்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த உதவிகளை வழங்குவதற்கு 63 மில்லியன் டொலர் நிதி அவசியமென உலக உணவுத்திட்டம் மதிப்பிட்டிருந்த நிலையில், இதுவரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், லக்ஸம்போர்க், நியூஸிலாந்து, நோர்வே, சுவிஸ்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிடமிருந்தும், ஐக்கிய நாடுகள் சபையின் அவசர நிதியத்திடமிருந்தும் 48 மில்லியன் டொலர் கிடைத்துள்ளது. அதற்கமைய உதவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (எ-14-இ)




# போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு

மன்னார், ஏப். 5
மன்னார் மடுப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் சமூகச் சீரழிவுக்கு எதிராக தட்சனா மருதமடு கல்விச் சமூகத்தால் விழிப்புணர்வுப் பேரணி நேற்றுக்காலை 9 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது.
உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பல்வேறு சுலோகங்களை ஏந்தி மாணவர்களும் அந்தப் பகுதி இளையோரும் பேரணியாகச் சென்றனர்.
இந்த விழிப்புணர்வுப் பேரணியில் மதத் தலைவர்கள், தட்சனா மருதமடு இளஞ்சுடர் சன சமூக நிலையத்தினர், தட்சனா மருதமடு மகா வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள், மாணவர் சமூகத்தினர், மடு பொலிஸ் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-213)

## ஆலயத்தில் மயங்கி வீழ்ந்த பெண்

யாழப்பாணம், ஏப். 5
மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலயத்தில் வயோதிபப் பெண்ணொருவர் மயங்கி வீழ்ந்துள்ளார். ஆலயத்தின் மூன்றாம் பங்குனித் திங்கள் உற்சவமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றபோதே அவர் மயங்கி வீழ்ந்துள்ளார். ஆலய நிர்வாகத்தினர் அவரை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். (ச-66)

## யாழ். போதனா கழிவுகளை எரிப்பதற்கு காணி வழங்கிய சிவபூமி அறக்கட்டளை


யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகளைத் தகனம் செய்வதற்கு சிவபூமி அறக்கட்டளை காணி ஒன்றை வழங்கியுள்ளது.
நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு ஓவியக் கண்காட்சியில் கலந்து கொண்ட சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் இது தொடர்பில் தெரிவித்ததாவது,
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகளை எரிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பல இடங்கள் தெரிவு செய்யப்பட்டபோதும், அதை நடைமுறைப்படுத்துவதில் தடங்கல்கள் ஏற்பட்டன. அதனால் அந்தக் கழிவுகளை குருநாகலில் தகனம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.
தற்போது மருத்துவமனை மிகுந்த நிதி நெருக்கடியிலும், மருந்துப் பற்றாக்குறையிலும் உள்ளது. இந்த நிலைமையில் கழிவுகளை குருநாகலுக்கு எடுத்துச் செல்வது அதிக பணச் செலவை ஏற்படுத்தும். அதைக் கருத்தில் கொண்டு சிவபூமி அறக்கட்டளையின் ஒரு பகுதிக் காணியை இந்த நடவடிக்கைக்கு வழங்கியுள்ளோம்.
21ஆவது நூற்றாண்டிலும் கழிவுகளைத் தகனம் செய்யத் தெரிவு செய்யப்படும் இடங்களில் பணிகளை முன்னெடுக்கவிடாது தடுப்பது மன வேதனையை ஏற்படுத்துகின்றது - என்றார். (எ-இ)

# இலவச சட்ட உதவி நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 4
"கிரிசலிஸ்", "சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை" நிறுவனங்களின் அனுசரணையுடன் இலவச சட்ட உதவி நடமாடும் சேவை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. குடும்ப வன்முறை வழக்குகள், பாலியல் மற்றும் பால்நிலை, காணிப் பிணக்குகள், பொருளாதார உரிமை, சுற்றுச்சூழல், விசேட தேவையுடையோர் சமூகம், சிறுவர் பாதுகாப்பு, ஓரினச் சேர்க்கை சமூகம் ஆகிய சேவைகளை இந்த நடமாடும் சேவையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
இலவச சட்ட உதவிகள் தொடர்பான ஆலோசனை தேவையானவர்கள் உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து சட்ட உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 06 . 1936

மறைவு 02 . 04 . 2023

## லூக்கேஸ்பிள்ளை அருளானந்தம் (ராசா)

இளவாலையை (மனத்தாவத்தை, உடையார் ஒழுங்கை) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லூக்கேஸ்பிள்ளை அருளானந்தம் கடந்த (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் லூக்கேஸ்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், றாயினி, பாபு, றஞ்சினி, றவி, தர்மினி, பிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (05.04.2023) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளவாலை புனித அன்னம்மாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs 24314) (N-1)

# எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு!

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. பண்டிகைக் காலத்தில் எரிபொருள் தேவை அதிகம் இருக்கும் என்பதால்தான் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி புத்தாண்டு வரையில், ஓட்டோக்களுக்கான பெற்றோல் ஒதுக்கீடு 8 லீற்றராகவும், மோட்டார் சைக்கிள்களுக்கான பெற்றோல் ஒதுக்கீடு 7 லீற்றராகவும், பேருந்துகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு 40 லீற்றரில் இருந்து 60 லீற்றராகவும், கார்களுக்கான பெற்றோல் ஒதுக்கீடு 20 லீற்றரில் இருந்து 30 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)

# வேட்புமனுக்களைத் தாக்கல்செய்த அரச பணியாளர்களுக்கு சம்பளம்!

## அமைச்சரவை அனுமதி

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

3 ஆயிரம் அரச ஊழியர்கள் வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளதுடன், அவர்களுக்கு தாபனக்கோவை விதியின் ஏற்பாடுகளுக்கமைய சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. எனினும், உள்ளூராட்சிசபைத் தேர்தல் தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் அவர்களின் சம்பளமற்ற விடுமுறைக்கான காலம் நீடிக்கப்படுகின்றமையால் குறித்த அலுவலர்கள் பொருளாதார ரீதியான சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் உள்ளூராட்சி தேர்தலுக்காக நியமனப்பத்திரங்களை சமர்ப்பித்துள்ள அரச அலுவலர்களுக்காக கடந்த மார்ச் 9ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய அடிப்படைச் சம்பளத்தைச் செலுத்துவதற்காக அரச பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிசபை அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ.44)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## ஏல விற்பனை

பரசங்குளம், புளியங்குளத்திலமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பயிற்சி நிலையத்தில் பின்வரும் கால்நடைகள் 11.04.2023 செவ்வாய்கிழமை அன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள்:

| இல | அடையாள இல. | கடா/ மறி | வயது |
|---|---|---|---|
| 1 | 4303-0919-0056 | மறி | 6 வருடங்கள் 5 மாதங்கள் |
| 2 | 4303-0919-0067 | மறி | 5 வருடங்கள் 7 மாதங்கள் |
| 3 | 4303-0919-0069 | மறி | 5 வருடங்கள் 5 மாதங்கள் |
| 4 | 4303-0919-0072 | மறி | 5 வருடங்கள் 5 மாதங்கள் |
| 5 | 4303-0919-0075 | மறி | 5 வருடங்கள் 5 மாதங்கள் |
| 6 | 4303-0919-0084 | மறி | 5 வருடங்கள் 3 மாதங்கள் |
| 7 | 4303-0919-0096 | மறி | 5 வருடங்கள் 8 மாதங்கள் |
| 8 | 4303-0919-0097 | மறி | 5 வருடங்கள் 8 மாதங்கள் |
| 9 | 4303-0919-0112 | மறி | 4 வருடங்கள் 3 மாதங்கள் |
| 10 | 4303-0919-0122 | மறி | 4 வருடங்கள் 2 மாதங்கள் |
| 11 | 4303-0919-0127 | மறி | 3 வருடங்கள் 11 மாதங்கள் |
| 12 | 4303-0919-0140 | மறி | 3 வருடங்கள் 8 மாதங்கள் |
| 13 | 4303-0919-0141 | மறி | 3 வருடங்கள் 8 மாதங்கள் |
| 14 | 4303-0919-0149 | கடா | 3 வருடங்கள் 6 மாதங்கள் |
| 15 | 4303-0919-0172 | மறி | 3 வருடங்கள் 4 மாதங்கள் |
| 16 | 4303-0919-0175 | மறி | 3 வருடங்கள் 4 மாதங்கள் |
| 17 | 4303-0919-0181 | கடா | 3 வருடங்கள் 2 மாதங்கள் |
| 18 | 4303-0919-0183 | மறி | 2 வருடங்கள் 5 மாதங்கள் |
| 19 | 4303-0919-0184 | மறி | 2 வருடங்கள் 5 மாதங்கள் |
| 20 | 4303-0919-0194 | கடா | 1 வருடம் 11 மாதங்கள் |
| 21 | 4303-0919-0200 | மறி | 1 வருடம் 11 மாதங்கள் |
| 22 | 4303-0919-0218 | கடா | 1 வருடம் 11 மாதங்கள் |
| 23 | 4303-0919-0220 | மறி | 1 வருடம் 11 மாதங்கள் |
| 24 | 4303-0919-0223 | கடா | 1 வருடம் 9 மாதங்கள் |
| 25 | 4303-0919-0224 | கடா | 1 வருடம் 9 மாதங்கள் |
| 26 | 4303-0919-0228 | கடா | 1 வருடம் 8 மாதங்கள் |
| 27 | 4303-0919-0234 | கடா | 1 வருடம் 5 மாதங்கள் |
| 28 | 4303-0919-0239 | கடா | 1 வருடம் 5 மாதங்கள் |
| 29 | 4303-0919-0240 | கடா | 1 வருடம் 5 மாதங்கள் |

மாடுகள்:

| இல | அடையாள இல. | பசு/நாம்பன் | வயது |
|---|---|---|---|
| 1 | 4303-0919-0009 | பசு | 10 வருடங்கள் |
| 2 | 4303-0919-0061 | பசு | 5 வருடங்கள் 3 மாதங்கள் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 10.04.2023 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் கால்நடைகளை பார்வையிடலாம். பார்வையிட்ட பின்னர் மீளப்பெற முடியாத பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 இனை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்வதுடன் 11.04.2023 அன்று ஏலவிற்பனைக்கு வருகை தரும்போது மீளப்பெறக்கூடியதாக ரூபா 10,000.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே ஏலவிற்பனையில் பங்குகொள்ள முடியும்.

**மக்கள் வங்கிக் கணக்கிலக்க விபரம்:**
கணக்குரிமையாளர்: நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கணக்கிலக்கம்: 970000060000276
நோக்கம்: ஏலவிற்பனைக்கான விண்ணப்பக் கட்டணம்

ஏலவிற்பனையானது 11.04.2023 செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு ஒருங்கிணைந்த பண்ணை, பரசங்குளம், புளியங்குளத்தில் நடைபெறும். ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

பதிவாளர்
04.04.2023

# மரண அறிவித்தல்



## திருமதி திசைவீரசிங்கம் மீனாம்பாள் (மீனா)

தோற்றம் 16.05.1937 — மறைவு 01.04.2023

யாழ். சிறாம்பியடி, பலாலிவீதி முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும், பின்னாளில் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திசைவீரசிங்கம் மீனாம்பாள் (மீனா) கடந்த (01-04-2023) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையை வாழ்விடமாகக் கொண்டிருந்த காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - வள்ளியம்மை தம்பதிகளின் மூன்றாவது மகளும், திரு.திருமதி சின்னையா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற திசைவீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மங்கையற்கரசி (இலெட்சுமி) மற்றும் தையல்நாயகி (அவுஸ்திரேலியா), கிருஷ்ணமூர்த்தி (முன்னாள் யாழ். கல்யாணி கிறீம் ஹவுஸ் - அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கருணாமூர்த்தி (முன்னாள் யாழ். கல்யாணி கிறீம் கவுஸ்) மற்றும் விஜயபாலன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பண்டிதர் சு. சின்னத்தம்பி (ஆசிரியர்), காலஞ்சென்ற கே.என். நவரெத்தினம் (பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செ. சிவஞானசுந்தரம் (ஆசிரியர்) மற்றும் திருமதி சிவாநந்தினி (அவுஸ்திரேலியா), திருமதி சுபத்திராதேவி (யாழ்.), திருமதி யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திசாநாயகி (மட்டுவில் தெற்கு), தி.உதயகுமாரன் (சுவிஸ்), சந்திரகுமாரன் (கனடா), காலஞ்சென்ற திருமதி. உதயகுமாரி, சற்குணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தலிங்கம், திருமதி சுமணா உதயகுமாரன், திருமதி நிமலவாஹினி சந்திரகுமாரன், காலஞ்சென்ற திரு. சற்குணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயக்குமார், ராஜ்குமார், பாலகுமார், லவக்குமார், திருக்குமார், அரஸ்குமார், ஷாலினி, லசன், விதுஷனி, தீபனா, ஹம்சிகன், றொசானி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் தெற்கு குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**உதயகுமார் குடும்பம் - 077 652 0823**
**சந்திரகுமார் குடும்பம், அமிர்தலிங்கம் குடும்பம்.**
**பேரன் - லவக்குமார் - 077 277 4185**

(CS/23760)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இனந்தெரியாதோரால் வீடொன்று தீக்கிரை

*கிளிநொச்சியில் சம்பவம்*

கிளிநொச்சி, ஏப். 5

கிளிநொச்சி - உருத்திரபுரம் பகுதியில் இனம் தெரியாத நபர்களால் வீடொன்று தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பெரும்பகுதி தீயில் எரிந்து சேதமாகியுள்ளதுடன், பெருமளவு உபகரணங்களும் தீயிற்கு இரையாகியுள்ளன. அத்துடன் வீட்டின் பிரதான நுழைவாயில் வாளால் வெட்டப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற கொலை ஒன்றில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபரின் வீடே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம)

# குஜராத் அணி நேற்று பதற்றமில்லா வெற்றி!



ஐ.பி.எல். தொடரின் நேற்றைய ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை பதற்றமில்லாமல் வீழ்த்தியது குஜராத். பாண்டியா டெல்லி அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டெல்லி அணி ஆரம்பத்திலிருந்தே குஜராத் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ளமுடியாமல் சிரமப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்ணர் மாத்திரம் அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். மத்தியவரிசையில் அபிசேக் பொரேல், அக்சர் பட்டேல் முறையே 20,36 ஓட்டங்களைப் பெற்று ஆறுதலளிக்க டெல்லி அணி நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் குஜராத் அணி சார்பாக சமி மற்றும் ரசிட் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், அல்சாரி ஜோசப் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பொடுத்தாடக் களமிறங்கிய குஜராத் அணி மிக விரைவிலேயே ஆரம்ப வீரர்களை இழந்து தவித்தது. எனினும் மூன்றாம் இடத்தில் களமிறங்கிய தமிழகத்தைச் சேர்ந்த வீரரான சாய் சுதர்சனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் அந்த அணி சரிவில் இருந்து மீண்டது. கடைசிக்கட்டத்தில் மில்லர் காட்டிய அதிரடியால் குஜராத் அணி 11 பந்துகள் மீதமிருக்கையில் வெற்றிபெற்றது. சாய் சுதர்சன் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 48 பந்துகளில் 62 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். மில்லர் 12 பந்துகளில் 31 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் அன்ட்றிச் நொர்ஜே 2 விக்கெட்டுக்களையும், கலீல் அஹமட், மிச்சல் மார்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இந்த வெற்றியை அடுத்து தான் விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் குஜராத் அணி வெற்றிபெற்றுள்ளது. டெல்லி அணி இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியடைந்துள்ளது. சாய் சுதர்சன் ஆட்ட நாயகனானார். (ம-ரி1)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 43 வயது விவாகரத்து செய்யப்பட்ட மணமகனுக்கு மணமகள் தேவை.

077 905 8615 (வைபர் & வாட்ஸ்ஆப்)

(CS 243221O-1)


## நினைவலைகள்

9 ஆம் ஆண்டு | 10 ஆம் ஆண்டு





அமரர் செல்லத்துரை சின்னராசா

மலர்வு 27.11.1930

உதிர்வு 29.01.2014

அமரர் சின்னராசா செல்வமணி (சிவமணி)

மலர்வு 10.04.1940

உதிர்வு 27.03.2013

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் – எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் – உங்கள் நினைவுகள் என்றும் அழியாது.

இணுவில் கிழக்கு. குடும்பத்தினர்.

(CS/24182)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 12 - 1937 | மறைவு 26 - 03 - 2023



### திருமதி ஜெயலட்சுமி சிதம்பரநாதன்

இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை

காரைநகர் யாழ்ரன் கல்லூரி (Yalton College, Karainagar)

யாழ் காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும், நோர்வேயில் Lillestrem ஐ வதிவிடமாகவும் கொண்ட ஜெயலட்சுமி சிதம்பரநாதன் அவர்கள் 26.03.2023 அன்று காலமானார்.

அன்னார் கிட்ணபிள்ளை சிதம்பரநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் சின்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கிட்ணபிள்ளை தங்கமுத்துவின் மருமகளும், ஜெயநாதன் (கண்ணன்), ஜெபநாதன் (சூட்டி), ஜெகநாதன் (பபி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலச்சந்திரன், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், அன்னலக்சுமி, தனலக்சுமி, சோமசுந்தரம், விஜயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌசலா (கௌசி), சுதர்ஷினி (விஜி), சர்மிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், அனிஷ், அஷ்வினா, ரீத்தி, அவந்தி, ஆர்த்தி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.04.2023) புதன்கிழமை Oslo, Norway இல் முற்பகல் 8.30 தொடக்கம் 10.00 மணிவரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 24316) (K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு ஒவ்வாமை காரணமாக 13 சிறார்கள் மருத்துவமனையில்

## பழுதடைந்த 'பால் பைக்கற்' காரணமா?

யாழ்ப்பாணம், ஏப். 5

கிளிநொச்சி, பாரதிபுரம் கிராமத்திலுள்ள முன்பள்ளி ஒன்றில், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பொதிசெய்யப்பட்ட பால் ஒவ்வாமையை ஏற்படுத்தியதையடுத்து 13 மாணவர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டனர்.

முன்பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தின் ஊடாக நிறுவனமொன்று பால் பைக்கற்றுக்களை வழங்கியுள்ளது. இதை அருந்திய பின்னர் மாணவர்களுக்கு வாந்தியும், வயிற்றோட்டமும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மாணவர்கள் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. சிகிச்சையின் பின்னர் மாணவர்களின் உடல்நிலை தேறியுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதையடுத்து, பால் பைக்கற்றின் மாதிரிகளை கொழும்பிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-214)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை

## மீண்டும் அரசு கைவிரிப்பு

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு நிதியில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிக்கும் அளவுக்கு நாட்டின் தேசியப் பொருளாதாரம் இன்னும் பலப்படவில்லை. பல தரப்புக் கடன்களை மீளச் செலுத்துவதை அரசாங்கம் மிகவும் நெருக்கடிக்குள் முன்னெடுத்து வருகின்றது. அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவு போன்ற நலன்புரிக் கொடுப்பனவுகள் போன்ற கட்டாயக் கொடுப்பனவுகளை அரசாங்கம் மிகவும் இக்கட்டான நிலையில் வழங்குகின்றது. பொருளாதாரம் எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் மீளவில்லை என்பதே உண்மை. ஆதலால், தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல் ஆணையகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்து ஒருமித்த கருத்துக்குக்கு வரவேண்டும் - என்றார். (ம)

### வடக்கு - ...

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனங்களை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் நாடாளுமன்றத்தில் ஆற்றும் பொய்யான உரை வெட்கக்கேடானது. நாட்டுக்குள் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெற்றால் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையமுடியாது. வடுகங்கல பகுதியிலுள்ள சிவன் கோயிலை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ் அரசியல் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

புராதன பௌத்த தொல்பொருள் சின்னங்களைச் சிதைத்து சட்டத்துக்கு முரணாக சிவன் கோயிலை அமைக்கும் தரப்பினருக்கு எதிராக சிவனின் சாபம் திரும்புமே தவிர ஏனைய தரப்பினருக்கு அல்ல. வடுகங்கல பகுதியில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டுள்ளமை தொல்பொருள் சான்றுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு இந்துக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளால்தான் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும். குருந்தூர்மலையில் பழமைவாய்ந்த பௌத்த மரபுரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பௌத்த வழிபாடுகளுக்கும் தமிழ் அரசியல் தரப்பினர் தடையேற்படுத்தியுள்ளார்கள். தேரவாத பௌத்த கொள்கையைப் பாதுகாக்கும் ஒரு நாடாக இலங்கையுள்ளது. ஆகவே பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்கள் அனைவருக்குமுண்டு. இலங்கை சிங்கள - பௌத்த நாடுஎன்பதை எவராலும் மறுக்கமுடியாது. பிரதான நிலை வர்த்தகத்தில் தமிழர்கள் ஈடுபடுகிறார்கள். அவர்களின் வாடிக்கையாளர்களாக சிங்களவர்கள் உள்ளார்கள். இனப்பிரச்சினை என்பதொன்று இருக்குமாயின் இந்த நிலை காணப்படாது. ஆகவே இல்லாத இனப்பிரச்சினையை தமிழ் அரசியல்வாதிகளே தோற்றுவிக்கிறார்கள். பௌத்த மரபுரிமைகளை அழிப்பதற்கும் ஓர் எல்லை உண்டு. பொறுமையுடன் செயற்படுகிறோம். கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கள மரபுரிமைகள் அழிக்கப்படுகின்ற நிலையில் சர்வதேச மட்டத்தில் சிங்களவர்களுக்கு எதிராகத் தவறான நிலைப்பாடு தோற்றுவிக்கப்படுகிறது.

தமிழினப் படுகொலைக்கு சிங்களவர்கள் பொறுப்புக்கூறவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் கடனாவில் அண்மையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானதொரு செயற்பாடாகும். தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காகவே போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. போர் முடிவடைந்ததன் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் எவ்வித இனப்படுகொலையும் இடம்பெறவில்லை என்பதை சர்வதேச நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். சிங்களவர்கள் இனப்படுகொலையாளிகள் என்று பறைசாற்றுவதை தமிழ் அரசியல்வாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம)

### கடற்படைக்கான...

ஊர்காவற்றுறை, தம்பாட்டிப் பகுதியில் கடற்படை முகாமுக்குக் காணி சுவீகரிப்பதற்காக நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டன.

நாரந்தனை வடக்கு தம்பாட்டிப் பகுதியிலுள்ள இறங்குதுறையில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமுக்கு, நிரந்தரமாகக் காணிசுவீகரிப்பதற்காகவே நேற்றையதினம் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதையறிந்த கிராம மக்கள், காணி சுவீகரிப்பு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட பகுதியில் ஒன்றுகூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். காணியை அளந்து கடற்படையினருக்கு வழங்குவதற்காக அங்கு சென்ற நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தை முடக்கி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதையடுத்து காணி அளவீட்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை புலனாய்வாளர்களும் கடற்படையினரும் ஒளிப்படங்களை எடுத்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. (அ-ம)

### ஆளுநரின்...

பத்தின் நிர்வாகத்தை மத்திய அரசின் கீழ் உள்ள புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடம் கையளிக்க வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா எடுத்த முயற்சிகளுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.

ஆளுநரின் நடவடிக்கைக்கு எதிராக யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் பார்த்தீபன் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் மனுதாரர் சார்பாக முன்னிலையானார். சமர்ப்பணங்களைக் கேட்டறிந்த நீதிமன்றம். ஆளுநரின் நடவடிக்கைக்கு இடைக்காலத் தடைவிதித்தது. இந்த வழக்கு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-ம-125,26)

### சிவ தோஷம்...

தோஷம் குல நாசம்' என்ற வாக்குக்கு அதிக பலம் உள்ளது. சிவன் மீது கைவைக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கிச் செல்லும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா, வெடுக்குநாறிமலையில் தமிழர்கள் பாரம்பரியமாக வழிபட்டுவந்த ஆதிலிங்கேஸ்வர ஆலயத்தின் சிவலிங்கங்களும் விக்கிரகங்களும் உடைத்தெறியப்பட்டுள்ளன. அம்மன் விக்கிரகத்தின் கழுத்துப் பகுதி வெட்டப்பட்டு வீசியெறியும் அளவுக்கு இந்த நாட்டில் இனவாதம் மேலோங்கியுள்ளது. ஓர் இனத்தினர் காலம் காலமாக கடைப்பிடித்த மத நம்பிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து செல்கிறதே தவிர குறைவடையவில்லை. தமிழர்களின் இருப்பும், சைவத்தின் இருப்பும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுவது கவலைக்குரியது.

முல்லைத்தீவு, குருந்தூர்மலை பகுதியில் இருந்து சிவ சின்னங்கள், சூலம் மற்றும் சிவலிங்கம் என்பன பெரும்பான்மைச் சமூகத்தால் அழிக்கப்பட்டன. குருந்தூர்மலையில் விகாரையை நிர்மாணிக்கும் பணிகளுக்கு முல்லைத்தீவு மாவட்டம் பல தடவைகள் தடை உத்தரவு பிறப்பித்தும், நீதிமன்றத்தை மதிக்காமல் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தெற்கில் மாத்திரமே நீதிமன்றங்கள் சுயாதீனமாகவும், தைரியமாகவும் செயற்படுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் பிறப்பிக்கும் உத்தரவை எவரும் குறிப்பாக பெரும்பான்மை இனத்தவர்கள் மதிப்பதும் இல்லை, செயற்படுத்துவதுமில்லை.

வவுனியா, வெடுக்குநாறிமலைப் பகுதியில் தமிழர்கள் தொன்றுதொட்டு சிவ வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இந்தப் பகுதி தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. அத்துடன் தொல்பொருள் அளவையியல் வரைபுக்குள்ளும் உள்வாங்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் இந்துக்களின் மத உரிமைகளுக்கு தொல்பொருள் திணைக்களம் இடையூறு விளைவிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இனவாதம் மற்றும் பௌத்தவாதம்பற்றி மேலோங்கி கருத்துரைக்கின்ற தரப்பினர்தான் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள். தமிழர்களின் காணி உரிமையும் பறிக்கப்படுகிறது, மத உரிமையும் பறிக்கப்படுகிறது.

'சிவ தோஷம் குல நாசம்' என்ற வாக்குக்கு இந்துக்கள் மத்தியில் அதிக நம்பிக்கை உள்ளது. சிவன் தலையில் கை வைக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த நாடு நாசத்தை நோக்கிச் செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. உள்ளகப் பொறிமுறை ஊடாக தீர்வு காண்பதாக சர்வதேசத்துக்குப் பொய்யுரைத்துவிட்டு, சர்வதேச நாடுகளை ஏமாற்றும் செயற்பாடுகள் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றன.

உடைக்கப்பட்ட சிவலிங்கம் மற்றும் விக்கிரகங்களை மீளவும் அமைப்பதாக இரு அமைச்சர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறி பகுதிக்கு பயணம் செய்தார்கள். இந்த விவகாரம் சட்ட விசாரணைக்குட்பட்டுள்ளது, ஆகவே சட்டத்தின் பிரகாரம் நடடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுவிட்டு திரும்பிவிட்டார்கள். உடைக்கப்பட்ட சிலைகள் மற்றும் சிவலிங்கத்தை மீளஅமைப்பதற்கு எவ்வித சட்டத் தடைகளும் காணப்படவில்லை. உண்மையில் இந்த அமைச்சர்கள் ஆடையுடன் திரிகிறார்களா? என்பது கேள்விக்குறியாக உள்ளது - என்றார். (அ-ம)

### மாமனார்...

லுக்கு உள்ளாகியதில் மருமகன் உயிரிழந்துள்ளார். ஆறுமுகம்பிள்ளை துஸ்யந்தன் (வயது -34) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தவராவார்.

துஸ்யந்தனும் அவருடைய மனைவியும் பிரிந்து வாழ்ந்துவந்த நிலையில், தனது மனைவியைப் பார்க்கச் சென்ற இடத்தில் மனைவியின் தந்தைக்கும் (மாமனாருக்கும்) துஸ்யந்தனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி அடிதடியாக மாறியது. இதையடுத்தே மாமனார் அவர் மீது மண்வெட்டிப்பிடியால் தாக்குதல் நடத்தியுள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்த குறித்த நபர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதி உடன் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(CR39604)(J-1) **076 009 4976**


# நெல்லியடியில் விபத்து நான்கு பேருக்கு காயம்

யாழ்ப்பாணம், ஏப். 5

கரவெட்டி, நெல்லியடி நாவலர் மடம் பகுதியில் நேற்று ஏற்பட்ட விபத்தில் நால்வர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிவந்த வர்த்தக கன்ரர் ரக வாகனமும், நெல்லியடி பகுதியிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹைஏஸ் வாகனமும் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்தது. விபத்தில் நால்வர் காயமடைந்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# அபிஷேக திருவிழா

யாழ்., ஏப். 5

கொழும்புத்துறை புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அபிஷேகத் திருவிழா இன்று புதன்கிழமை பங்குனி உத்தரத்தன்று ஆரம்பமாகவுள்ளது.

பன்னிரு நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் தினமும் மு.ப. 10 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-17)

# பறவைகளை அடைத்து வைத்திருந்தவர் கைது

கி நொச்சி, ஏப். 5

சு ந்திரமாகப் பறக்க வே ண்டிய பறவைகளைக் கூண்டில் அடைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் கி நொச்சியைச் சேர்ந்த தனியார் வ த்தக நிலைய உ மையாளர் நேற்று கைது செய்யப் ப ள்ளார். (ஒ.113)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர், நல்லூர், கச்சேரி, அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை. (CS 24318) (J-1) **076 738 6189**

## காணி விற்பனைக்கு

இயக்கச்சியில் 40 பரப்பு தென்னந்தோட்டம் (Reecha Farm அருகில்) விற்பனைக்குண்டு.

**076 200 9025** (CS22587)(J-1)

## வாடகைக்கு தேவை

- ✔ கன்டர் ரக லொறி
- ✔ அலுமினியம் Full Body
- ✔ 4/6 சில் (4/6 Wheel)

நீண்ட நாள் வாடகைக்கு தேவை.

075 9360 370 (CS 24320) (J-1)

## A/L Physics

**Physics Domain Zoom Unit @ Jaffna**

**பொறியியல் (விசையும் இயக்கமும்)**

**Paper Classes (1979 - 2022) with Theory Revision**

**T.u Jiinthu**
**Zoom ID : 811 4918 5666**
**PW:TJ7**

**ஆரம்பம் 06-April 07.00 PM**

★ முதல் இரு வகுப்புக்களிலும் கட்டணம் இன்றி இணைந்து வகுப்புக்கள் பயனுள்ளதாயின் மாத்திரம் தொடரவும்.

★ நேரடி வகுப்புக்கள் யாழ்.நகர் **Science College** ல் நடைபெறுகின்றன.

**T.P: 076 6034 895** (CS 24319) A-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 51 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை **125000,00/=**

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து **1 1/2 KM** தூரம்.

தொடர்பு: **076 755 8606**
**077 6385 683**

(CS 24323 B) A-1

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200.000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- **076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

(CS 24323 A)A-1

## வீடு தேவை

மல்லாகம் - காங்கேசன்துறை (KKS) கே.கே.எஸ் (KKS) வீதியை அண்மித்த பகுதியில் குறைந்தது மூன்று அறைகளுடன் காணியுடன் கூடிய தனி வீடு வாடகைக்குத்தேவை.

**077 736 0353**

## காணி தேவை

மல்லாகம் - மாவிட்டபுரம் கே.கே.எஸ் (KKS) வீதி. முகப்புடன் கூடிய குறைந்த பட்சம் 20 பரப்பு நிலப்பரப்புடன் கூடிய காணி தேவை.

**077 736 0353**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 08.03.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இராமுப்பிள்ளை செல்வநாதன் (நகுலன் J.P)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (07.04.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 11.06.1956 — மறைவு 08.03.2023

இல. 29, நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(CS/24280)AH-1

குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✔ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
  2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✔ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✔ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்,
- ✔ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✔ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✔ A-9 பிரதான வீதியில் இருந்து **700M** தூரம்.
- ✔ காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- ✔ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 24317) (J-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

…த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.